788

குண்டூசி

பிப்ரவரி..எட்டு அணா

விண்ட்ஸர்

கலாவதி

T.A.ஜயலக்ஷ்மி..T.S.துரைராஜ்..C.T.ராஜகாந்தம்

கரிகாலனுக்கு கொள்கையிலே
நம்பிக்கை..........
ஊர்வசிக்கு கொலையிலே
நம்பிக்கை..........
கலாவதிக்கு உண்மையிலே
நம்பிக்கை..........
மூன்றிற்கும்
முடிபோட்டார்
மர்மயோகி
ADULTS ..ONLY..
ஜுபிடர் தயாரிப்பு
டைரக்ஷன் · கே. ராம்நாத்
கதை, வசனம். ஏ. எஸ். ஏ. சாமி
ஸ்டூடியோ · சென்ட்ரல் ·
சென்னை பிரபாத் · சித்ரா · ராஜகுமாரி
மற்றும் ராஜதானி பூராவும்......

இந்த 3 பாயிண்டு சேமிப்பு திட்டத்தை உங்கள் பாதுகாப்பு சாஸனமாகச் செய்து கொள்ளுங்கள்

1 உங்கள் சொந்த நலனுக்காகவே சொல்லுகிறோம். உங்களது தற்போதைய தேவைகளுக்காக எவ்வளவு செலவழிக்க நேரிட்டாலும் எதிர்பாராத விதமாக ஏற்படும் செலவுகளுக்கென்று ஏதாவது கொஞ்சம் ஒதுக்கிவைக்கவே நீங்கள் விரும்புவீர்கள். தபால் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்கி சிக்கனத்தை ஆதரிக்கிறது. உங்களது சிறு சேமிப்புகளைப் போட்டு வைக்க தகுதி வாய்ந்த வசதிகளைச் செய்து கொடுக்கிறது. ரூ. 200-க்கு மேல் பாங்கியில் இருந்தால் வருமான வரியின்றி வருஷத்திற்கு 2% வீதம் வட்டியும் தருகிறது. உங்கள் டிபாஸிட் பணத்திலிருந்து அவசரத்துக்கு உடனுக்குடன் பணம் பெறுவதற்கு முடியும். அத்துடன் பாதுகாப்புக்கு உத்தரவாதம்.

2 உங்கள் சொந்த நலனுக்காகவே சொல்லுகிறோம். வருங்காலத்திற்காகப் போதுமான ஏற்பாடுகளை நீங்கள் செய்துகொள்ள விரும்புவீர்கள். நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்து வையுங்கள். இன்று பிரசித்தமாயுள்ள சேமிப்பு முறை அதுதான். ஏனெனில் இவை சர்க்கார் உத்தரவாதம் பெற்றவை. உயர்ந்த விகித வட்டியை தருபவை. மேலும் அவற்றின் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்திற்கு வருமான வரி கிடையாது என்பது மட்டுமின்றி, மொத்தமாகக் கிடைக்கும் வருமானமும் வரி விலக்கப்பெற்றது. இன்று ரூ. 100 போட்டு வைத்தால் 12 வருஷத்தில் அது ரூ. 150 ஆகும். 5, 7. வருஷ சர்டிபிகேட்டுகளும் முறையே 3%. 3¼%க்குச் சற்றுக் கூடுதலாகவும் கிடைக்கும். இந்த சர்டிபிகேட்டுகளை காலாவதியாவதற்கு முன் தேவை ஏற்பட்டால் மாற்றிப் பணமாக்கிக் கொள்ளலாம். அவை வாங்குவதற்குப் பத்திரமானவை.

3 உங்கள் சொந்த நலனுக்காகவே சொல்லுகிறோம். பொதுவாக நாட்டின் சுபிட்சத்தை அதிகரிப்பதற்காக நீங்கள் தேசிய முயற்சிக்கு உதவி செய்ய விரும்புவீர்கள். உங்களுடைய பெரிய சேமிப்புகளை தேசிய முன்னேற்ற திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்காகப் போட்டு வையுங்கள். பொதுநலத் திட்டக்காரர்களுக்கு, அவ்வப்போது கோரப்படும் சர்க்கார் கடன் பத்திரங்களில் கணிசமான பணம் போடுவதை விடச் சிறந்த முதலீடு வேறு எதுவும் கிடையாது.

சாத்தியமானதை எல்லாம்

சேமியுங்கள்

புத்திசாலித்தனமாக

முதலீடு செய்யுங்கள்

நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர் அறிக்கை.

இந்திய சர்க்கார், நிதி மந்திரி காரியாலயம்

பிரிய சகோதரிகளே!

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது, நானே உங்களைப் போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது, வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி:

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

134139
சென்னை-600 008

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. M.) JULLUNDUR CITY.

புது வருடத்தில் புதிதாக வழங்குவது

வேண்டியபடி மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய ஒரு நூதன ஸ்டெயின்லஸ் ஸ்டீல், குரோமியம் அல்லது ரோல்டுகோல்டு செயின் ஒவ்வொரு கெடியாரத்துடனும் இலவசமாக வழங்கப்படும். இங்குள்ள எல்லா 5 ஜ்வல், 7 ஜ்வல் ஸ்விஸ் கடியாரங்களும் 4 வருஷங்களுக்கும், 15 ஜ்வல் 17 ஜ்வல் ஸ்விஸ் கடியாரங்கள் 7 வருஷங்களுக்கும் பிழையின்றி ஓட உத்தரவாதமளிக்கப்படும். உத்தரவாத சர்ட்டிபிகேட்டுடன் ஒரு அழகிய வெல்வெட் பெட்டியில் சப்ளை செய்யப்படும். தபாற்செலவு பாக்கிங் & விற்பனை வரி இலவசம்.

இலவசம்

இரண்டு கடியாரங்கள் வாங்கினால் ஒரு அழகிய பேனா & பென்ஸில் செட்டும் டயரியும் இலவசம். மூன்று கடியாரங்கள் வாங்கினால் ஒரு ரோல்டுகோல்டு பாக்கெட் வாட்ச், செயினுடன் இலவசம். 4 கடியாரங்கள் வாங்குவோருக்கு ஒரு அழகிய சதுர அலாரம் டைம்பீஸ் இலவசம். ஒரு நூதன அழகிய 1951ஆம் காலண்டர் பிரதி கடியாரத்துடனும் இலவசம்.



ரெளண்ட் செண்டர் வேண்டியபடி மாற்றக்கூடிய செயினுடன் (சைஸ் $10\frac{1}{2}$)

காட்லாக் நெ.		ஜ்வல்	விலை
601	குரோமியம் ஸ்டீல்பாக் ஜவல்டு		25
602	ரோல்ட் கோல்ட் டை டை		27
605	ரோ. கோல்ட் ஸ்டீல்பாக்	7	44
672	குரோமியம் ஸ்டீல் ,,	15	50
673	ரோல்ட் கோல்ட் ஸ்டீல்பாக்	15	55
676	ரோல்ட் கோல்ட் ஸ்டீல்பாக்	17	70



ரெளண்ட் சிறியது. இஷ்டம்போல் மாற்றக் கூடிய செயினுடன் (சைஸ் $8\frac{3}{4}$)

காட்லாக் நெ.		ஜ்வல்	விலை
613	குரோமியம் ஸ்டீல் பாக்	5	28
614	ரோல்ட் கோல்ட் டை	5	31
615	முழு ரோ. கோல்ட் கேஸ்	5	33
616	குரோமியம் டை	7	33
617	ரோல்ட் கோல்ட் டை	7	37
679	ரோல்ட் கோல்ட் டை	15	60
680	20 மைக்ரான் தங்க கேஸ்	15	70

வாட்டர் புரூப், ஷாக் புரூப் தூசி படியாதது சென்டர் செகண்ட் ரேடியம் டயல் (சைஸ் $10\frac{1}{2}$) மாற்றியமைக்கக்கூடிய செயினுடன்

723	குரோமியம ஸ்டீல்பாக் கேஸ்	15	60
724	ரோ. கோல்ட் ஸ்டீல்பாக்	15	65
725	20 மைக்ரான் தங்க கேஸ்	15	75
726	குரோமியம் ஸ்டீல்பாக்	17	80
727	ரோ. கோல்ட் ஸ்டீல்பாக்	17	90
728	20 மைக்ரான் தங்க கேஸ்	17	105

ரெக்டாங்கிள் ஷேப். இஷ்டம்போல் மாற்றக் கூடிய செயின் உடையது (சைஸ் $7\frac{3}{4}$)

635	குரோமியம் ஸ்டீல் பாக்	5	35
636	ரோல்ட். கோல்ட் ஸ்டீல் பாக்	5	38
638	குரோமியம் ஸ்டீல் பாக்	7	40
640	முழு ரோல்ட் கோல்ட் கேஸ்	7	46
700	குரோமியம் ஸ்டீல் பாக்	15	55
701	ரோல்ட் கோல்ட் ஸ்டீல் பாக்	15	60
704	ரோல்ட் கோல்ட் ஸ்டீல் பாக்	17	80

ASIA WATCH HOUSE

A-46, Sadashive Lane,
P.B. 3607, GIRGAUM,
BOMBAY-4.

Adapex.

போட்டி நெ. 18. கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் நெ. 342.

பரிசு ரூ. 30,000 உத்திரவாதம்

எங்கள் சீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணுக்கு
எண் முற்றிலும் சரியான விடைக்கு ஒரு ரோல்டு கோல்டு ரிஸ்ட் வாட்ச் & ரூ. 2500
முதல் இரண்டு வரிசைகள் சரியானதற்கு ... ... ரூ. 100
முதல் வரிசை சரியானதற்கு ... ... ரூ. 25
முதல் வரிசையில் முதல் இரண்டு எண்கள் சரியானதற்கு ... ரூ. 10
முதல் வரிசையில் முதல் எண் சரியானதற்கு ... ... ரூ. 5

கூப்பன்களை தபாலில் சேர்க்க வேண்டிய

கடைசி தேதி 28—2—51. **விடை தேதி 8—3—51**

98

இந்த சதுரத்தில் 17 முதல் 32 வரையிலுள்ள எண்களை வலமாகவும், மேலிருந்து கீழாகவும், இடமாகவும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத்தொகை 98 வரும்படி அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரு முறைதான் உபயோகிக்கலாம்.

பிரவேசக்கட்டணம் :

1 கூபனுக்கு ரூ. 1. பிரதி 6 கூபன்களுக்கு ரூ. 5.

கட்டணத்தொகையை மணியார்டர் அல்லது க்ராஸ் செய்யப்படாத இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்ப வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். இந்த போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானதும், கட்டுப் படுத்துவதுமாகும். எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப் படமாட்டாது. மணியார்டர் ரசீதுகளை கூப்பனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். போட்டியின் சீலிட்ட விடை 6-3-51ந் தேதி மாலை 5-30 மணிக்கு எங்கள் காரியாலயத்தில் திறக்கப்படும். உள்ளூர் போட்டி நேயர்கள் நேரில் ஆஜராகலாம். 28-2-51ந் தேதியன்றும் பிரவேசக்கட்டணத்துடன் கூப்பனை தபாலில் போடலாம்.

KISHORE PUZZLES, No. 18 (G), 1/27, R. H. Road, Madras-1

தங்கம் இனும்!

எங்கள் அமெரிக்கன் நியூ கோல்டு தங்கத்தை பிரபலப் படுத்துவதற்காக, நான்கு வைரப்பட்டை தீர்த்த வளையல்கள், ஒரு புது டிஸைன் நெக்லெஸ், ஒரு ஜோடி காதணிகள், இரண்டு பம்பாய் பாஷன் மோதிரங்கள் இவைகள் அடங்கிய ஒரு மாதிரிப் பெட்டியையும், இத்துடன் நான்கு தோலா நியூகோல்டு தங்கத்தையும் இனுமாக அளிக்க எங்கள் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர். இலவச நியூ கோல்டுக்கும் மாதிரிப் பெட்டிக்கும் இன்றே எழுதுங்கள். பிறகு ஏமாற வேண்டாம்.

IMPERIAL COMMERCIAL CO.,

(G. M.) JULLUNDUR CITY.

இந்தியாவில் மிகப் பெரிய பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF FACTORY IN MADRAS



N. V. SHUNMUGAM & Co.

MADRAS SNUFF

HIGHLY SPOKEN BY THE PUBLIC.

என். வி.

ஷண்முகம் கம்பெனியார்

தபால் பெட்டி 555 — மதராஸ்.

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் [illegible]திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சை கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடுபேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

விவாகமாகாதவர்களுக்கு ஒரு யோசனை!!!

"விந்தன்" எழுதிய

பாலும் பாவையும்

என்னும் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள்!

விலை ரூ. 3—8—0 தபாற் செலவு அணா 8

ஸ்டார் பிரசுரம்,

சென்னை—5.

ரூ. 2-8-0 மட்டும் முதலீடு செய்து

ரூ. 19,532

சம்பாதியுங்கள்

●

மாணாக்கரோ, ஆபீஸரோ, ஆணோ, பெண்ணோ, வாலிபரோ, வயோதிகரோ, நீங்கள் என்ன வேலையிலிருந்தாலும், எங்கிருந்தாலும் பாதகமில்லை-வேண்டுமானால் மேற்குறித்த தொகை சம்பாதிக்கலாம். அநுபவம் வேண்டிய அவசியமில்லை.

முழு விபரங்களுக்கும் எழுதி, எப்படி சம்பாதிக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

THE NATIONAL FINANCE CORPORATION,

(G. M.) Jullundur City.

குழந்தைகள் விரும்புவது....

குமரன் மிட்டாய்

KUMARAN CONFECTIONERY WORKS.
MADRAS. 21.

குண்டூசி

தென்னிந்தியாவிலேயே நிகரற்ற
விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஆசிரியர்-பி. ஆர். எஸ். கோபால்

பட்டை 4
ஊசி - 5
பிரதி 41

மத்திய தணிக்கை போர்டு

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட அகில இந்திய மத்திய தணிக்கை போர்டு ஜனவரி மாதம் 15-ந் தேதி முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. அந்தந்த மாகாணங்களில் தனித்தனியாய் ஏற்படுத்தப்பட்டிருந்த மாகாண போர்டுகள் கலைக்கப்பட்டுவிட்டன.

மத்திய தணிக்கை போர்டு பாட்னா மாஜி நீதிபதி ஸ்ரீ. அகர்வாலாவின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் மிஸஸ் லீலாவதி முன்ஷி, எஸ். கே. பட்டீல், ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன், துஷார் காந்தி கோஷ், பி. என். சர்க்கார், டாக்டர் அமர்நாத் ஜ்ஹா, ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மாகாணங்கள் ஒவ்வொன்றிற்கும் 12 அங்கத்தினர்கள் அடங்கிய கிளை ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாகாண போர்டிற்கு (மணிக்கொடி) கே. ஸ்ரீநிவாஸன் தலைவராய் நியமிக்கப்பட்டுள்ளார். கிளை போர்டுகள் அதனதன் பிரதேசத்தில் தயாராகும் படங்களை தணிக்கை செய்யும். தகராறு ஏற்பட்டால், மத்திய போர்டு படத்தை மீண்டும் பார்த்து தீர்ப்பளிக்கும்.

அ. இ. தணிக்கை போர்டைப் பற்றி சினிமா வட்டாரங்களில் திருப்திகரமான வரவேற்பைக் காணோம். முந்தின போர்டை விட புதிய ஏற்பாட்டின் மூலம் அதிக கெடுதல் ஏற்படுமோ என்று பட முதலாளிகள் பயப்படுகின்றனர். அதற்கேற்றாற்போல் பட தணிக்கைக் கட்டணம் ஆயிரம் அடிக்கு ரூ. 5-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டிருப்பது அவர்கள் பயத்திற்கு உரம் அளிக்கிறது. கட்டண உயர்வுபற்றி சர்க்கார் கூறியுள்ள காரணங்கள் சரியாகத் தோன்றவில்லை. முன்பே ஏராளமாய் வரி செலுத்தி வரும் இத்தொழிலின்மீது மேலும் பளுவேற்றுவது நியாயமல்ல.

தணிக்கை போர்டுக்கும், படத்தொழிலினருக்கும் இடையே ஆரம்பம் முதலே வெறுப்பு மனப்பான்மைதான் இருந்து வந்திருக்கிறது. இந்த நிலைமை மாறி, புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் போர்டாவது சினிமாத் தொழிலிடம் சிநேக மனப்பான்மையுடன் வேலை செய்ய வேண்டும். அவர்கள் தணிக்கை செய்வது படத் தயாரிப்பாளர்களுக்கு இடையூறு செய்வதாக இல்லாமல், உதவி செய்வதாக இருக்க வேண்டும். பட முதலாளிகளும் ஆட்சேபகரமான, ஆபாசமான காட்சிகளையெல்லாம் தயாரித்து விட்டு தணிக்கை போர்டார்மீது புகார் கூறுவதற்குப் பதில், தணிக்கை வரம்புகளுக்குட்பட்டதான — பொதுஜன ஒழுக்கத்தைப் பாதிக்காததான — படங்களைத் தயாரிக்க முற்பட வேண்டும்.

படங்களைத் தயாரிப்பதற்கு முன்னதாகவே படக் கதைகளையும், வசனங்களையும் தணிக்கை போர்டினர் பார்வையிட்டு விட்டால் முதலாளிகளுக்கு பின்னால் நஷ்டம் ஏற்படாமலிருக்கும். வேண்டுமானால், இதை ஒரு தணிக்கை விதியாகவே செய்து விடாமல், இஷ்டப்பட்டு தாமாக கதைகளை அனுப்பி வைக்கும் பட முதலாளிகளுக்கு மட்டும் போர்டார் யோசனைகளைக் கூறலாம்.

புதிய தணிக்கை போர்டு அமைக்கப்பட்டிருக்கும் முறையைவிட, அதில் புதிதாக சம்பந்தப் பட்டுள்ளவர்கள் எப்படி உழைக்கப் போகிறார்கள் என்பதே முக்கியமாகும். இந்திய சினிமாத் தொழில் உன்னத ஸ்தானத்தை அடைய வேண்டியது அவர்கள் நோக்கமாய் இருக்குமாக.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

சென்ற மாத இறுதியில் இந்திய சினிமா உலகம் பூராவும் கலகலப்புடன் காணப்பட்டது. காரணம், உலகப் பிரசித்தி பெற்ற ரஷ்ய டைரெக்டர் புடோகினும், பிரபல ரஷ்ய நடிகர் செர்க்கோ ஸோவும் இந்தியாவுக்கு விஜயம் செய்து, இந்தியப் படத்தொழில் பிரமுகர்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டது தான். பொழுது போக்கு விஷயத்தில் அமெரிக்கப் படங்கள் பிரபலமாய் இருந்த போதிலும், டெக்னிக் விஷயத்தில் ரஷ்ய படங்கள் இணையற்று விளங்குகின்றன. புரட்சிகரமான பல பிலிம் டெக்னிக்குகளின் சிருஷ்டி கர்த்தாவான புடோகினை (அவரது புஸ்தகங்கள் மூலம்) பின்பற்றி உருவாகியுள்ளவர்களே நம் படத் தொழிலில் பெரும்பாலோர். எனவே, அவரே நேரில் பிரசன்னமானுர் என்ருல் கேட்க வேண்டுமா! குரு சிஷ்ய விசுவாசத்துடன் இந்தியப் படத்தொழிலினர் புடோகினை (பம்பாயிலும், சென்னையிலும்) வரவேற்று கௌரவித்தனர். பம்பாயில் இந்த ரஷ்யக் கலைஞர்கள் சில முக்கிய ஸ்டுடியோக்களுக்கு விஜயம் செய்தனர். அதே போல சென்னையில் (இந்தியாவிலேயே சிறந்ததான) ஜெமினி ஸ்டுடியோவுக்கு இக்கலைஞர்கள் விஜயம் செய்ய ஏற்பாடு செய்யாதது வருந்தத்தக்க விஷயமே.

சென்னை சினிமாக் கழகம்

சென்னை சர்க்காரிடமிருந்து இம்மாதம் ஒரு நல்ல சேதி கிடைக்கிறது. அதாவது, சென்னை மாகாணத்திற்கென சர்க்கார் ஒரு சினிமாக் கழகத்தை ஸ்தாபிக்கப் போகிருர்கள். இக்கழகத்தில் பட முதலாளிகள், டெக்னிஷ்யன்கள், பொது ஜனப் பிரமுகர்கள் உள்ளிட்ட 12 அங்கத்தினர்கள் இருப்பார்களாம். கழகத்தின் நோக்கம், வேலைத் திட்டம் இவைகளைப் பற்றி பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் ஆலோசித்து வருகின்றனர்.

சிறிது காலத்திற்கு முன் "நவஜீவனம்" படத்திற்கு சர்க்கார் பரிசளித்த போது நாம் எழுதியிருந்த தலையங்கத்தில், "கட்டணம் செலுத்தி போட்டியில் கலந்து கொண்ட படங்களை மட்டும் பரிசீலனை செய்து சிறந்த படத்தைத் தேர்ந்தெடுத்தது சரியல்ல" என்று எழுதியிருந்தோம். சர்க்கார் இந்த முறையைக் கைவிட்டு விட்டதற்காக சந்தோஷிக்கிறேன். ஒரு வருஷத்தில் வெளிவரும் எல்லாப் படங்களையும் பரிசீலனை செய்து பரிசு வழங்கும் பொறுப்பை மேற் சொன்ன புதுக் கழகத்திடம் சர்க்கார் ஒப்படைக்கப் போகிருர்களாம்.

சினிமாத் தொழிலுக்கு இது போன்ற ஒரு கழகம் நெடுநாளையத் தேவையாகும். அதுவும் இப்பொழுது சர்க்காரின் ஆதரவில் அது ஸ்தாபிக்கப்படுவது மிக வரவேற்கத்தக்கதே. இக்கழகத்தின் மூலம் சர்க்காருக்கும் சினிமாத் தொழிலுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படக் கூடும். இத்தொழில் முன்னேற்றத்திற்கான பல நல்ல காரியங்களை இக்கழகம் மேற்கொள்ளலாம். எனவே, நான் பிரதம மந்திரியின் முயற்சியைப் பாராட்டி, இக்கழகத்தை வரவேற்கிறேன்.

படத் தொழிலுக்கு பண உதவி

புது டில்லியிலிருந்தும் இம்மாதம் சினிமா சம்பந்தமான நல்ல செய்திகள் வருகின்றன. பிரிட்டிஷ் பிலிம் பண உதவி கார்பொரேஷன் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது; எப்படி வேலை செய்கிறது —என்பதைப் பற்றியும், இந்தியப் படத் தொழிலுக்கும் அது மாதிரி ஒரு பண உதவி ஸ்தாபனம் அத்திபாவசியம் என்பதையும் "குண்டூசி"யின் முன்பொரு தலையங்கத்தில் வெளியிட்டிருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். சமீபத்தில் விசாரணையை முடித்திருக்கும் சினிமா விசாரணைக் கமிட்டியினர், இது போன்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப் போவதாய் தெரிகிறது. இக்கமிட்டியினர் இந்திய சினிமாத் தொழில் முன்னேற்றத்திற்கான மற்றும் பல புதிய யோசனைகளை தங்கள் யாதாஸ்தில் கூறப் போகிருர்களாம். இச் செய்திகளை யெல்லாம் கேட்கும்போது இந்திய சினிமாத் தொழிலுக்கு நல்ல காலம் உதயம் ஆகிவிட்டதேபோல் தோன்றுகிறதல்லவா?

நடிகமணி

சிறுகளத்தூர் சாமா

"ஹிந்தி நடிகர்களைப் பாருங்கள்; ஆங்கில நடிகர்களைப் பாருங்கள்; பிரமாதமாய் நடிக்கிறார்கள். நம் தமிழ் நடிகர்களையும் பாருங்கள்; மகா மோசம்"—இதுமாதிரி சினிமா ரஸிகர்கள் கூறுவதை நீங்கள் பலமுறை கேட்டிருப்பீர்கள். ஏன், நீங்களேகூட கூறியிருப்பீர்கள்.

ஆனால், உண்மையென்ன? தமிழ் நடிக நடிகைகளுக்கு நடிப்பதற்கு வராது என்பதல்ல. அவர்கள் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளுவதில்லை; முயற்சி எடுத்துக் கொள்ளுபவர்களுக்கோ தகுந்த சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதில்லை. இதுதான் உண்மை. உதாரணமாக, சிறுகளத்தூர் சாமாவை எடுத்துக்கொள்ளுங்கள். கிருஷ்ணன் வேஷமா, புலவர் வேஷமா, முனிவர் வேஷமா, வேதியர் வேஷமா, பௌத்த பிக்ஷுவின் வேஷமா, சமூகப் படத்தில் தகப்பனார் வேஷமா—இப்படி எந்த வேஷத்தை அவருக்குக் கொடுத்தாலும் சரி; பாத்திரத்தின் தன்மையை அவர் முதலில் நன்கு ஆராய்ந்து உணர்ந்துகொண்டு, தத்ரூபமாய் நடித்து, உங்கள் பேரபிமானத்திற்கு பாத்திரமாகிவிடுவார். அவர் பல படங்கள்மூலம் இந்த உண்மையை ஸ்தாபித்திருக்கிறார். அவர் நன்றாக நடிக்கும் திறமையுடையவர் என்பதைப் பற்றி தமிழ்ப்பட உலகில் இரண்டபிப்பிராயம் இல்லை. பின் ஏன் தமிழ்ப்பட **உலகம் அவரை நிறையப் பயன்படுத்திக் கொள்ளவில்லை! 'நம் படங்களில்** நடிப்பு அம்சம் உன்னத நிலை அடைய வேண்டும்; நல்ல நடிகர்களை உன்னத ஸ்தானத்திற்கு ஏற்றிவைக்கவேண்டும்' என்ற ஆர்வம் நம் பட முதலாளிகளிடமும், டைரெக்டர்களிடமும் குறைவாக இருக்கிறது என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன காரணம் சொல்லமுடியும்?

சாமாவுக்கு நடிப்புணர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல; சிறு வயதிலேயே—பள்ளிக்கூடத்தில் படித்துவந்தபோதே—அவர் நன்கு நடித்து "சபாஷ்!" பெற்று வந்தார். இப்பொழுதெல்லாம் சாமா பாட்டைவிட நடிப்பு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். ஆனால் அந்தக் காலத்திலோ அவர் நடிப்பைவிட பாட்டையே முக்கியமாய் கருதி வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு தெரிந்தவர்கள் அவரிடம் எதிர்பார்த்ததும் அதுவே.

ஐந்தரைக்கட்டை ஸ்ருதியுள்ள மணியோசை போன்ற சாரீரம்; பிருகாக்களோ ஆச்சரியப்படத் தக்க வேகத்தில் ஜிலுஜிலுப்புடன் தொடர்ந்துவரும். இந்த இயற்கை சாதனங்களுடன் அந்நாளில் சாமா பாட ஆரம்பித்தால் கேட்பவர்கள் அப்படியே பிரமித்து விடுவார்கள். தமிழ் வகுப்பு சங்கீத வகுப்பாக மாறிவிடும்! தமிழ்ப் பண்டிதர் செய்யுளை சாமாவிடம் கொடுத்து சங்கீதமாய் பொழியும்படி செய்வாராம்! சங்கீதத்தில் தேர்ந்தவர்களான சில நாதஸ்வரக்காரர்கள்கூட அவரைத் தங்கள் வீட்டிற்கழைத்துச் சென்று, அவரைப் பாடச் செய்து, அவரது பாட்டுகளில் இயற்கையாய் அமைந்திருந்த சில பிருகாக்களை சாதகம் செய்து கொள்ளுவார்கள் என்றால் **அதிகம் சொல்வானேன்!**

இவ்வளவிற்கும் சாமா யாரிடமும் முறையாக சிக்ஷை சொல்லிக்கொள்ள

வாழ்க்கை வர்ணனை

வில்லை. கேள்வி ஞானத்தின் மூலமே அவர் தம் சங்கீதத்தை விருத்தி செய்து கொண்டு வந்தார். அந்த சமயத்தில், (பிரபல வைத்தியரான) ராவ்சாகிப் ஆப்ரஹாம் பண்டிதர் தஞ்சையில் ஒரு சங்கீத விழாவை

ராஜசூயம்

பர்த்ருஹரி

நடத்தினர். அந்த விழாவில் சாமாவுக்குப் பாடும் பாக்கியம் கிடைத்தது. அவர் தைரியமாகப் பாடி அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றார்.

அப்பொழுது சாமா பாடிவந்த பாட்டுகளுள் "கோபுரத் தங்கத் தூபி", "மூசுவண்டு" ஆகிய இரண்டு காவடிச் சிந்துப் பாட்டுகளும் அவரது 'மாஸ்டர் பீஸாக' விளங்கின. எங்கு பாடினாலும் அவர் இவ்விரண்டையும் பாடாவிட்டால் விடமாட்டார்கள். இது காரணமாய், அவரது நண்பர்கள் அவரை "மூசுவண்டு!" என்றே அழைக்க ஆரம்பித்துவிட்டனர்! சாமாவும் இப்பட்டத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். இப்பொழுது கூட அவரது பால்ய நண்பர்கள் அவரைச் சந்திக்கும்பொழுது, "என்ன, மூசுவண்டு! சௌக்கியமா!" என்று கூறி தமாஷ் செய்கிறார்களாம்.

ஒரு குறிப்பிட்ட சிறு வட்டாரத்தில் பிரபலமாயிருந்த சாமாவின் சங்கீதம் இப்பொழுது தமிழ்ப் பட ரஸிகர்கள் உள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தி

கந்தரை

பெற்றிருக்கிறது. ஆனல் முன்பு அவர் பாடிவந்ததற்கும் இப்பொழுது பாடி வருவதற்கும் எவ்வளவோ வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது! கணீரென்ற குரல் கம்பீரமான குரலாக மாறியிருக்கிறது. இப்பொழுது வெறும் பிருகாக்கள் மூலம் பிரமிக்கச் செய்வதற்குப் பதில் பாவத்தின் மூலம் உணர்ச்சிகளைக் கிளறிவிடுகிறது அவரது பாட்டுகள். சினிமாப் படங்களில் அவர் சங்கீதத்தின் மூலம் புகழ் நாட்டிக்கொள்ள முயலவில்லை. ஆனல், ஒவ்வொரு படத்திலும் அவர் பாடியுள்ள ஓரிரண்டு பாட்டுகளோ ரஸிகர்களின் உள்ளத்தில் பாய்ந்து பதிந்து போயுள்ளன. காதளவில் கேட்டு மறக்கும் சங்கீதத்தைவிட உள்ளத்தில் உணர்ச்சிகளை ஏற்படுத்துவது

ராஜமுக்தி

சகுந்தலை

தானே சிறந்த சங்கீதம்! சாமாவை ஒரு சங்கீத வித்வானக ரஸிகர்கள் கருதாவிட்டாலும் அவரது பாட்டை விரும்பிக் கேட்பதற்கு இது தான் காரணம்.

தம் பால்ய நண்பர்களிடையே "மூசுவண்டு" என்றும், சினிமாவில் "சாமா" என்றும் பிரபலம் அடைந்திருக்கும் சிறுகளத்தூர் சாமாவின் அசல் பெயர் சுவாமிநாதன் என்பது. தஞ்சை ஜில்லாவிலுள்ள சிறுகளத்தூரில் ஒரு மிராசுதாரராயிருந்த வைத்தியநாதய்யர்தான் சாமாவின் தகப்பனர் ஆவார்.

சாமாவுக்கு ஐந்தாவது வயது நடந்துகொண்டிருந்த போது அவரது தாயார் காலமானர். பின்னர் தகப்பனர் மறுமணம் செய்துகொண்டார். அது காரணமாக, சாமாவை அவரது தாய்மாமன் தஞ்சைக்கு அழைத்துச் சென்று, பள்ளியில் சேர்த்தார். கலியாண சுந்தரம் ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்ட சாமா ஊக்கமாய் படித்து எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறினர்.

படிப்பு அத்துடன் முடிந்தது. 'அதன் பிறகு என்ன செய்யலாம்?' என்ற பிரச்னை ஆரம்பமாகியது. கொஞ்சகாலம் ஏதேதோ பல வீண் முயற்சிகளில் ஈடுபட்டுவிட்டு, கடைசியில் அவரும், அவரது தம்பியும் உத்தியோகம் தேடிக்கொள்வதற்காக சென்னைக்கு வந்தனர். சென்னையில் கொஞ்சகாலம் ஆடிய உத்தி

ருப் பதில் நடிப்புத் திறமையை விருத்தி செய்து கொள்ள அவருக்கு நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவைகளை நழுவ விடாமல் பயன் படுத்திக்கொண்டார் சாமா. 'ஷேக்ஸ்பியரின் கதா பாத்திரங்

யோக வேட்டையின் பலனாக சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் காரியாலயத்தில். சொற்ப சமபளத்தில் ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது. இரண்டு மாத காலத்திற்குப் பின் அவர் இந்த வேலையை விட்டுவிட்டு, சென்னை 'காஸ்மா பாலிடன் கிளப்'பில் ஒரு குமாஸ்தாவாகச் சேர்ந்தார்.

சுமார் பத்து வருஷ காலம் அவர் இந்த உத்தியோகத்திலிருந்தார். இந்த உத்தியோகத்திலிருந்த வரையில் அவருக்கு ஓய்வு நேரமே இல்லாமையால், தம் சங்கீதத்தைத் துருப்பிடிக்க விட வேண்டியதாயிற்று. ஆனால் சங்கீதத்திற்

மேலே: "சிந்தாமணி"யில் சாமாவும், அஸ்வத்தாமாவும்.

இடது புறம்: "அம்பிகாபதி"யில் கம்பர்.

கீழே: "பாமா பரிணய"த்தில்

களை நடிப்பதில் இணையற்றவர்' என்று எல்லோரும் அவரைப் பாராட்டத் தொடங்கினர். தற்போது சாமா ஒரு சிறந்த நடிகராக விளங்குவதற்கு மேற்சொன்ன சந்தர்ப்பங்களே அஸ்திவாரமாகும்.

காஸ்மாபாலிடன் கிளப்பில் வேலை பார்த்து வந்தபோது (1930ல்) 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்' கம்பெனியார் அவரது பாட்டுகள் சிலவற்றை இசைத் தட்டுகள்மூலம் வெளியிட்டனர். அதே சமயத்தில் அவருக்கு தம்முடைய உத்தியோகத்தில் சலிப்பு ஏற்பட்டிருந்தது. ஒன்று வேறு உத்தியோகம் பார்த்துக்கொள்ளுவது அல்லது நடிப்புத் தொழிலில் ஈடுபடுவது—என்ற முடிவுடன்

[தொடர்ச்சி 62ம் பக்கத்தில்]

அம்சா தேவி

விழுப்புரம் நா. தியாகராசன்

அம்சா தேவி அப்படியே கல்லாய் சமைந்து போய் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் சிவந்து சுருங்கியிருந்தது. இந்த வித ஆபத்து நேரும் என்று அவள் கனவில் கூட நினைத்ததில்லை. அவள் மனம் பலவிதமான பயங்கர எண்ணங்களினால் குழம்பிப் போய் இருந்தது. ஒரு வேளை இதெல்லாம் ஏதாவது படத்தில் நடிப்பதற்கான ஒத்திகையோ! சே...சே...இருக்க முடியாது.

அம்சாவின் முகம் உண்மையாகவே கன்னிப் போய் இருந்தது. அவளுக்கு முன் புரட்யூசர் புவனசுந்தரம் சிரித்துக் கொண்டு நின்றார்! முகத்தில் கொடுமையான ஆசை தாண்டவமாடியது.

"அம்சா!......கடைசியாக நீ என்ன தான் சொல்லுகிறாய்?" என்று தன் கட்டையான குரலில் கேட்டார் அவர்.

சிறு கதை

அம்சா பதில் அளிக்கவில்லை. அவள் பளிங்குக் கன்னங்களில் கண்ணீர் நிற மற்ற கோடிட்டு ஓடியது. புவனசுந்தரம் கோரிய—நிறைவேற்ற முடியாத ஆசை அவளுக்கு ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் அளித்தது! புவனசுந்தரம் இப்படி ஒரு இரக்கமற்ற மிருகமாக மாறுவார் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

புவனசுந்தரம், 'புராண பிலிம் கம்பெனி'யின் முதலாளியும் டைரெக்டரும் ஆவார். அவர் பலவெற்றிகரமான படங்களைத் தயாரித்து பணத்தையும் புகழையும் சம்பாதித்துக்கொண்டிருந்தார். வயது நாற்பதுக்குக் கொஞ்சம் அதிகமானாலும் அவரது ஒற்றை நாடியான கவர்ச்சிகரமான தோற்றம் வயதைக் குறைத்தே காட்டியது. அவருடைய திறமை காரணமாகப் புகழ் அடைந்தவள்தான் நடிகை அம்சாதேவி.

புவனசுந்தரம் என்றால் ஸ்டுடியோவில் ஹீரோயின் முதல் எக்ஸ்டரா வரை, காமிரா மென் முதல் லைட் பாய் வரையில் யாவரும் நடுங்குவர். அவரால் வெளியிடப்பட்ட படங்கள் கலையை வளர்ப்பவையாகவும், வசூல் வெற்றி உடையவையாகவும் இருந்ததற்கு மற்றவர்களின் பயபக்தியுடன் கூடிய ஒத்துழைப்புதான் முக்கிய காரணமாகும்.

"மனிதன் நல்லவன் தான். ஆனால் பெண்களிடம் மட்டும் கொஞ்சம் சபலமாய் நடந்து கொள்ளுவான்" என்று சிப்பந்திகள் புவனசுந்தரத்தைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். புவனசுந்தரத்தின் அடாச் செய்கையால் உடல் குலைந்தும், உள்ளம் உடைந்தும் ஸ்டுடியோவை விட்டு வெளியேறிய இளம் பெண்கள் பலர்! எனினும் அவருக்குப் பட உலகில் 'தலைசிறந்த பட முதலாளி' என்ற பெயர் மட்டும் மங்கரமல்தான் இருந்து வந்தது.

"என்ன அம்சா!...இன்னுமா யோசிக்கிறாய்?... மேடம் அன் டாய்னே படத்தை இன்னிக்கிப் பார்க்கப் போகணும்...இரண்டில் ஒன்று சொல், சீக்கிரம்!" என்று மறுமுறை கர்ஜித்தார் புவனசுந்தரம்.

அம்சாதேவி சிந்தனை லோகத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தாள். தன் முன் வெறி பிடித்த புலிபோல் உறுமிக்கொண்டிருந்த புவனசுந்தரம் இன்னும் அகலவில்லை என்று தெரிந்ததும், சிறிது சப்தத்தோடு வாய்விட்டு அழுதாள். அவள் கைக்குட்டை கண்ணீரால் நனைந்துபோய் விட்டது. முகமும் சிவந்து போய் விட்டது. புவனத்திற்குக்கூட சிறிது பயம் தோன்றியது. ஆனாலும், அவருடைய கோபம் அதிகரிக்கவே ஆரம்பித்து விட்டது.

"அம்சா, மூன்று வருஷங்களுக்கு முன் நீ இருந்த நிலையை யோசித்துப் பார்...

"போட்டோ...ஆமாம், அந்தப் போட்டோ!... அதை நினைக்கும்போதே அவளுடைய உள்ளமும் உடலும் கிடுகிடுவென்று நடுங்கின......"

ஒரு சாதாரண எக்ஸ்ட்ரா...இறந்து போகும் நிலையில் இருந்த உன் அப்பா... நான் தானே உன்னை இந்தப் பதவிக்குக் கொண்டு வைத்திருக்கிறேன்...'வானத்தி லிருந்து குதித்த தேவதை' என்று மக்கள் உன்னை கொண்டாடும்படி செய்தேன்... அந்த நன்றியை மறந்து விட்டாயா நீ... உன் விசிறிகள் உன் படத்தை முத்த மிடும் அளவுக்கு உன்னை உயர்த்தி வைத்த எனக்குத் துரோகம் செய்ய முயலாதே..." என்றார். அவரது குரல் கண்டிப்பும் பயமுறுத்தலும் கலந்து தொனித்தன. அம்சாவின் கண்ணாடிக் கன்னங்களில் கண்ணீர் வழிவதை இரக்கமின்றி அவர் பார்த்துக் கொண்டுதானிருந்தார்.

"ஏன் பேசமாட்டேன் என்கிறாய்... பேச நாக்கு வரவில்லையோ?...உன்னைக் கண்ட நாள் முதல் உன்னை என் தெய்வ மாகப் போற்றி காதலிப்பவன் நான் என்று தெரிந்திருந்தும் சில வாரங்களு க்கு முன் என்னைக் கேளாமலே அந்த ராஜூவை மணந்து கொண்ட உன் துரோகச் செயலை மறக்க முடியவில்லை யோ?...அப்படியாவது...ராஜூ உன்னை நிஜமாகவே காதலிக்கிறானா?" என்று கிண்டலாகக் கேட்டார் புவனசுந்தரம்.

அம்சாவின் கோபம் அளவை மீறி யது..." ஸார்...போதும் உங்கள் பூச் சாண்டி!...உங்கள் மனைவி ராதாவிடம் யாராவது ஒருத்தன் இப்படிக் கேட் டால் நீங்கள் என்ன சொல்லுவீர்க ளென்று நினைத்துப் பாருங்கள்" என்று படபடப்புடன் சொல்லி அழுதாள்.



தைரியமாய், "மறுத்து விட்டால்...?" என்ற கேள்வியைக் கேட்டாள் அம்சா.

புவனசுந்தரம் கோரமாகச் சிரித்தார்...! "மறுத்துவிட்டால் என்ன ஆகும் என்று கேட்கிறாயா...! 'அழகு ராணி' பதவியிலிருந்து முதலில் இறக்கப்படுவாய். உன்னை ஆதரிக்கும் விசிறிகளின் உள்ளத்தில் விஷத்தைக் கலந்து விடுவேன்...உனக்கு அழகும், நடிப்புத் திறனும் இருக்கும் போதே 'விசிறி'கள் உன்னை வெறுக்கும்படி செய்வேன். அதோடு மட்டுமல்ல, மொட்டைக் கடிதங்களும், உன்னுடைய பத்தினித் தனத்தை அம்பலப்படுத்தும் போட்டோக்களும் ராஜுவை நோக்கிப் பறக்கும்...பிறகு...ஹி!...ஹி!...ஹி!" என்று பல்லைக் காட்டி கொடூரமாகச் சிரித்தார் புவனசுந்தரம்.

புவனசுந்தரம் "போட்டோ" என்று கூறியதும் அவளது உடல் திடீரென மின்சாரம் பாய்ந்தது போல் குலுங்கியது. போட்டோ!......ஆமாம்......அந்த போட்டோ!... அதை நினைக்கும் போதே அவள் உள்ளமும் உடலும் சேர்ந்து கிடுகிடு என்று நடுங்கின. தலை சுற்றியது. முகம் வியர்த்தது. நினைவுத் தொடர்கள் அவள் மனதில் மின்னல்போல் பளிச்சென்று தோன்ற ஆரம்பித்தன.

கள்ளம் கபடற்ற சம்பவங்களில் அந்த சம்பவமும் ஒன்று. அவள் கல்யாணத்திற்கு வெகு காலத்திற்கு முன்பு நடந்தது அது. அப்பொழுது அவள் புவனசுந்தரத்திற்குப் புது முகம்! புவனசுந்தரம் அம்சாவை மகளென மதித்து கௌரவமாக நடத்தி வந்த காலம். அம்சாவும் அவரிடம் அவரது பெண் போல மரியாதையுடனும் அன்புடனும் நடந்து வந்த காலம் அது.

அன்றொரு நாள் புவனசுந்தரம் உல்லாச யாத்திரை ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். நகரத்திற்கு சில மைல்கள் அப்பாலுள்ள தனிமையான, கடற்கரை யோரமான ஓரிடத்திற்குப் போவதென முடிவு செய்யப் பட்டிருந்தது. புவனசுந்தரம், அம்சாதேவி, உதவி டைரெக்டர் அமர்நாத் ஆகிய மூவரும் அன்று மிக ஆனந்தமுடன் கடல் மணலில் ஆடிப் பாடி நேரத்தைக் கழித்தனர்...

அம்சா குளிக்கும் உடை அணிந்து கடலில் துளைந்து விட்டு, புள்ளி மான் போல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தாள். மாலைக் கதிரவன் வேகமாக மேலை மலையில் வீழத் தலைப்பட்டான்...மயங்கிய ஒளி கடற்கரையில் இருந்த மூவருக்கும்

"சீ ...நாயே!...உன்னைப் போன்ற நாய்கள் என்னைப் பற்றியோ...என் குடும்பத்தைப் பற்றியோ பேசினல் எனக்குப் பிரமாதமான கோபம் வரும்.... நான் கேட்பது இதுதான்...உன் கணவன் ஆஸ்பத்திரியில் இருப்பது எனக்குத் தெரியும். நான் நேற்றுவரை செய்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரமாய் இன்று இரவு நீ உன்னை எனக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்...தெரிந்ததா!...மறுத்தால்..." என்று கூறிவிட்டுப் பல்லை நறநறவென்று கடித்தார் புவனசுந்தரம்.

நடிகையின் மார்பு ஒரு முறை விம்மித் தணிந்தது. கண்ணீர் அருவியென கன்னத்தைக் கிழித்தோடியது. எனினும்,

அளவிலா இன்பத்தை அள்ளி அளித்துக் கொண்டிருந்தது. நேரம் ஆக ஆக அம்சாவோடு பழகுவதில் புவனசுந்தரம் தன் முழு சுதந்திரத்தையும் காட்ட ஆரம்பித்தார்... அம்சாவின் வெள்ளை உள்ளம் இதையெல்லாம் சந்தேகிக்கவில்லை. பாவம் உலகமறியாத கன்னி!

புவனசுந்தரம் ஒரு முறை திடீரென்று தன் கரங்களை அம்சாவின் கழுத்தின் மேல் சுற்றி, அணைத்துக் கொண்டு, அவள் கன்னத்தில் முத்தமிட்டார். இதை அவள் எதிர்பார்க்கவேயில்லை.

இந்த ஒரு வினாடி சம்பவம் பேதைப் பெண் அம்சாவின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்களைத் தூண்டிவிட்டது. பயத்துடன் தன் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு புவனசுந்தரத்தைக் கேள்விக் குறியோடு பார்த்தாள். புவனசுந்தரம் பல்லைக்காட்டிச் சிரித்தார். "நான் பிடிக்கப்போகும் வஞ்சக வனிதை என்ற படத்தில் ஒரு காட்சி இப்படித்தான்" என்று கூறி நகைத்தார். மறு வினாடியே அவள் கண்ட காட்சி அவளுக்கு மேலும் திகிலை மூட்டிவிட்டது. அமர்நாத் அப்பொழுதுதான் படம் எடுத்து முடித்தது போல் தன் கைக்காமிராவை மூடிக் கொண்டிருந்தார். ஒருவேளை புவனசுந்தரம் அவளை முத்தமிட்ட காட்சியைத் தான் படம் பிடித்துவிட்டாரா?

திரும்பி வரும்போது வழியிலெல்லாம் புவனசுந்தரம் அதை ஒன்றும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு வந்தார், அம்சாவிடம். ஆனால் அன்றுமுதல் அம்சாவை பயம் பிடித்துக் கொண்டது. ஸ்டுடியோவிலிருந்து டைரெக்டரின் துர்ச்செயலால் வெளியேறிய பல இளம் பெண்களின் சோகக் கதைகள் அம்சாவுக்குத் தெரிய வரவும்தான் அவள் ராஜூவை மணந்து கொண்டாள்.

காலப் போக்கில் புவனசுந்தரமும் ராதா என்ற ஒரு பெண்ணை மணந்து கொண்டார். ராதா வடநாட்டுப் பெண். புவனசுந்தரம் வடநாடு சுற்றுப் பிரயாணம் செய்தபோது அவருக்குக் கிடைத்திருந்தபுதுமுகம். அந்த முகத்தை சினிமா உலகில் காட்டாது தம் இல்லற உலகிலேயே தள்ளிவிட்டார் புவனசுந்தரம்!

[தொடர்ச்சி 52ம் பக்கத்தில்]

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF!

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

சமீபத்தில், நாடகக் கலையில் விசேஷ ஆர்வமும், அக்கறையுமுள்ள நண்பர் ஒருவரை சந்தித்தேன். டாக்டர் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தார் அவர். "எல்லாம் நாடகக் கலை விழாவினால் வந்த வினை" என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டார். விஷயம் விளங்காது விழித்தேன் நான். அவர் விஷயத்தை விளக்கினார். 'அடாது பனி பெய்தாலும் விடாது நாடகங்களை நடத்தி' முடித்துவிட்டார்கள், சென்னை நாடகக் கழகத்தினர். திறந்த வெளியிலே உட்கார்ந்து அவர்கள் நடத்திய பல நாடகங்களைப் பார்த்து, என் நண்பரைப் போல் உடம்புக்கு வரவழைத்துக்கொண்டு அவஸ்தைப் பட்டவர்கள் பலர்.

• • •

என் நண்பர் எடுத்துச்சொன்ன யோசனை எனக்கு ரொம்பவும் உசிதமாகப்பட்டது. ஆகவே, அதையும் இங்கு குறிப்பிட்டு விடுகிறேன். டிஸம்பர்-ஜனவரி மாதங்களில் சென்னையில் எப்பக்கம் திரும்பினாலும் சங்கீத-நடனக் கச்சேரிகள் தான். எதற்குப் போவது என்றே கலாபிமானிகள் திகைத்துத் தவிக்கும் அதே சமயத்தில், நாடகக் கலை விழாவையும் வைத்துக்கொள்வானேன்! ஏப்ரல்-மே மாதங்களில் வைத்துக் கொள்ளலாமே. கோடையில், புற்றீசல் போல் வீடுகளில் அடைபட்டுக் கிடக்கும் சென்னை வாசிகள் சில மணி நேரமாவது திறந்த வெளியில் காற்றாட உட்கார்ந்து நாடகம் பார்ப்பதைப் பெரிதும் விரும்புவார்கள். கழகத்திற்கும் வருமானம் அதிகம் கிடைக்கும்.

• • •

கலை விழாவில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் ரஸிகர்களைப் பனியில் தவிக்க விட்டது ஒருபுற மிருக்க, இட ஏற்பாடுகள் விஷயத்திலும் அதிருப்தியே ஏற்படும்படி செய்திருந்தார்கள். பத்திரிகை நிருபர்களுக்கான ஆசனங்களை மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொள்ள, அவர்கள் ஆயுள் அங்கத்தினர்களின் ஸ்தானங்களில் உட்கார்ந்து கொள்ள, ஆயுள் அங்கத்தினர்கள் பிரமுகர்களின் இடங்களைப் பிடித்துக் கொள்ள, பிரமுகர்கள் இடமின்றி பிரமித்து நிற்க, அவர்களுக்கு எங்கே இடம் கொடுப்பது என்று நிர்வாகிகள் கையைப் பிசைந்துகொண்டு நிற்க—இப்படி ஒரே தமாஷும், ரகளையுமாக இருந்தது பிரதி தினமும்.

• • •

நாடகக் கலையை உத்தாரணம் செய்வது என்பது நாடகக் கம்பெனிகளால் தான் முடியக்கூடிய ஒரு காரியம் என்பது கழக நிர்வாகிகளின் அபிப்பிராயமோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் நாடகக் கலையில் ஹிருதயபூர்வமான ஆர்வமுள்ளவர்கள் அமெச்சூர் சபைகளோ என்பது என் நம்பிக்கை. நாடகக் கம்பெனிகள் தங்கள் ஜீவனத்திற்காக நாடகம் நடிப்பவர்கள். அமெச்சூர்களோ கலை ஆர்வங்கொண்டு நாடகம் நடிப்பவர்கள். இப்படிக் கலை ஆர்வமுள்ள பல அமெச்சூர் நாடகசபாக்களுக்கு நாடகக் கலை விழாவில் போதுமான ஆதரவு காட்டாதது வருந்தத்தக்க விஷயமே. கலை விழாவில் நடந்த முப்பது நாடகங்களில் விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஒன்றிரண்டு நாடகங்களே அமெச்சூர்களுடையவை. மற்றவை யெல்லாம் நாடகக் கம்பெனிகளால் பங்கு போட்டுக்கொள்ளப்பட்ட நாடகங்களே.

• • •

முக்கியமாக இந்த விழாவில் டி. கே. எஸ். பிரதர்ஸின் நாடகங்களுக்கே

அதிகமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் நடித்த நாடகங்கள் அனைத்தும் ஏற்கெனவே சென்னை மக்கள் பார்த்த நாடகங்கள்தாம். இந்த ஏற்பாட்டைப் பார்க்கும்போது நமக்கு நிர்வாகிகளின் நோக்கத்தில் சந்தேகமே ஏற்படுகிறது. அவர்களது செய்கையின் பின்னணியில் சுயநலமே அடிப்படையாக இருப்பதாகவே நம்பவேண்டியிருக்கிறது. வெளியிலிருப்போர் பேசிக்கொள்வதில் உண்மை இருக்குமோ என்றேதான் நினைக்க வேண்டியிருக்கிறது. "சகோதரர்கள் தங்கள் கம்பெனியை மூடிவிட்டார்கள். அந்தக் கம்பெனியின் ஜீவனம் நடக்கவே இந்தக் கழகம் உதயமாயிற்றே?" என்று கருதும் பலரது சந்தேகத்தை எப்படி நிவர்த்திப்பதென்று எனக்குப் புரியவில்லை.

* * *

இந்த விஷயத்தில் கழக நிர்வாகிகளில் ஒருவரான சாரங்கபாணியை மிகவும் பாராட்டத்தான் வேண்டும். அவர் தமது கோஷ்டியினருக்கோ, அல்லது தமக்கு

டி. ஜானகிராமனின் டைரெக்ஷனில் உருவாகி வரும் "நடிகை" தமிழ்ப் படத்தில் டி. கிருஷ்ணமூர்த்தி இவ்விதம் தோன்றி நடிக்கிறார்.

'வேண்டியவர்'களின் நாடகங்களுக்கோ சலுகை காட்டவில்லை என்பது மட்டுமல்ல. நகரில் நாடகம் ஆடிக்கொண்டிருந்த, ஏற்கெனவே நிகழ்ச்சிக் குறிப்பில் போடப்படாத எம். ஆர். ராதா கோஷ்டியினருக்கு கலை விழாவில் ஒரு நாடகம் நடிக்க சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்ததையே குறிப்பிடுகிறேன்.

* * *

'அமெச்சூர் நாடகங்களுக்கு அதிகமான வசூல் கிடைக்காது என்ற பயத்தில் அவர்களுக்கு அதிகமான நாடகங்கள் அளிக்கப்படவில்லை' — என்று கூறப்படலாம். ஆனால் நாடகக் கழகத்தின் நோக்கம் நாடகக் கலையை முன்னுக்குக் கொண்டு வருவதுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. அமெச்சூர் நாடகங்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளித்தால் தான் அவர்கள் நோக்கம் நிறைவேறும். அமெச்சூர் நாடகங்களுக்கு அதிகக் கூட்டம் கூடுவதில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்களது நாடகங்களோ, நடிப்புத் திறமையோ அல்ல. அந்த நாடகங்கள் அதிகப்படியாக சரியான முறையில் விளம்பரப்படுத்தப் படாததே ஆகும்.

• • •

ஒரு பழைய காலத்து ஹாஸ்ய நடிகர், இப்பொழுது சிரம தசையில் இருந்து வருகிறவர். தம் போன்ற சக தொழிலாளிகள் சிலரைச் சேர்த்து ஒரு நாடகத்தைத் தயார் செய்து கொண்டு நாடகக் கழக நிர்வாகிகளிடம் போனார். தமக்குக் கலை விழாவில் ஒரு நாடகம் கொடுக்கும்படி கெஞ்சினார். அவரைப் பல தடவைகள் அலைக்கழித்துவிட்டு, "உங்கள் கோஷ்டியில் 'ஸ்டார் வால்யூ' இல்லையே!" என்று கையை விரித்துவிட்டார்களாம் கழக நிர்வாகிகள். இன்றும், "நாடகத்திறகு 'ஸ்டார் வால்யூவா!" என்று ஓயாது புலம்பிக் கொண்டிருக்கிறார் அந்த ஹாஸ்ய நடிகர்.

• • •

நடுவில் ஒரு நாள் ஏமாற்று 'வித்தை'யும் நடக்கத் தவறவில்லை. டி. கே. எஸ். குழுவினர்—கே. ஆர். ராமசாமி குழுவினர் சேர்ந்து நடிக்கும் 'மனோஹரா' நாடகம் என்று அறிவித்திருந்தார்கள். கே.

"ஓ! ஐயாமாரே வாருங்கோ! வனசுந்தரியிலே பாருங்கோ! என் ஆட்டம் வெகு ஜோராய் இருக்கும் தானுங்கோ!" என்கிறுரோ லலிதா!

ஆர். ராமசாமியும், டி. கே. சண்முகமும் மேடையில் தோன்றி நடிப்பார்கள் என்று நம்பியே பலர் கூடியிருந்தனர். அவர்கள் அப்படி எதிர்பார்த்ததிலும் ஒன்றும் தவறில்லை. ஆனால் அவர்கள் இருவருமே நடிக்காமல் ஊர் பெயர் தெரியாத 'சில்லுண்டி'கள் மேடைமீது வந்து நடித்தால் பொறுமையாகவா பார்த்துக் கொண்டிருப்பார்கள்! "எங்கே கே. ஆர். ராமசாமி? கொண்டா டி. கே. சண்முகத்தை!" என்று அவர்கள் இரைச்சல் போட்டதைக் குற்றமாகச் சொல்ல முடியுமா! டி. கே. சண்முகம் மேடைமீது தோன்றி எவ்வளவோ சமாதானம் கூறினுர் என்றுலும், ரஸிகர்கள் திருப்தி அடைந்துவிடவில்லை.

● ● ●

நாடகக் கழக விழாவிலேயே ரஸமான விஷயங்கள் நடந்ததெல்லாம் அவர்கள் ஆண்டுவிழாக் கொண்டாடிய தினத்தன்றுதான். நாடகச் சபையையும். கழகத்தையும் பற்றி சிலர் பேசினுர்கள். பலர் 'போர'டித்தார்கள். அதையெல்லாம் பொறுக்க முடியாத ஜனங்கள் சீட்டி அடித்தார்கள்; கை தட்டினுர்கள். கிருஷ்ணன்—மதுரம் நடிக்கும் நாடகத்தைப் பார்க்கத் திரளாகக் கூடியிருந்தோர் முன்னிலையில் வழவழவென்று பேசிக்கொண்டே போனுல் அவர்கள் தான் பொறுப்பார்களா? பேசவேண்டியவர்களெல்லாம் அதையெல்லாம் பேசி முடித்துவிட்டார்கள். பேசினவர்கள் என்ன பேசினுர்கள் என்பது அந்தக் கூச்சலில் யாருக்கும் கேட்டிருக்காது; பேசினவர்களுக்கே புரிந்திருக்குமா என்பதும் சந்தேகம்தான்!

* * *

அன்று, டி. கே. சண்முகத்தின் மீது ரஸிகர்களுக்கு அதிகமான வெறுப்பு ஏற்படும்படி அவர் நடந்துகொண்டதும் விசித்திரம்தான். ஏற்கெனவே, நாஸ்திகப் பிரசாரத்துக்கு அவர் மறைமுகமாக ஆதரவு காட்டிவருவதாக ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. அதை ஊர்ஜிதப்

படுத்துவது போலிருந்தது அன்றைய அவருடைய பேச்சு. பேசப் போகிறவர்களை அறிமுகப்படுத்திய அவர், எம். ஆர். ராதாவையும், 'திரு எம். ஆர். ராதா பேசுவார்கள்' என்றே சாதாரணமாகக் கூறியிருக்கலாம். அதை விட்டு, "ஆஸ்திகத்தைப் பிரசாரம் செய்யும் நவாப் ராஜமாணிக்கத்திற்கு இங்கே பேச எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை நாஸ்திகத்தைப் பிரசாரம் செய்யும் எம். ஆர். ராதாவுக்கும் உண்டு" என்று (அதிகப்) பிரசங்கம் புரிந்திருக்க வேண்டியதில்லை.

• • •

மற்றும் அன்று கிடைத்த எதிர்பாராத ஹாஸ்யம் ஸ்ரீ. ஏ. எஸ். பி. அய்யருடைய தமிழ்ப் பேச்சு. அன்று விழாவுக்கு விஜயம் செய்திருந்த ஷேக்ஸ்பியர் நடிகர். மிஸ்டர் நார்மன் மார்ஷல் ஆங்கிலத்தில் பேசியதை அவர் தமிழ்—மலையாளம் கலந்த ஒரு கதம்ப பாஷையில்—மொழி பெயர்த்து முடியும்வரையில், சபை ஒரே கலகலப்பாய் இருந்தது.

இந்தியாவில் மிகப் பெரிய பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF FACTORY IN MADRAS



N.V. SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

N. V.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 — மதருஸ்.

இதற்குமுன் அவர் பேசியபோது டி. ஏ. மதுரத்தை "ஸ்ரீமதி மதுரை அவர்கள்" என்று குறிப்பிட்டபோதுகூட அவ்வளவு சிரிக்கவில்லை ஜனங்கள்!

• • •

அன்று விழாவுக்குத் தலைமை வகித்த மந்திரி கோபால் ரெட்டியாரின் பேச்சை ஆங்கிலத்திலிருந்து தமிழ்ப் படுத்திய எஸ் டி. சுந்தரத்தின் மீது எல்லோருக்கும் அனுதாபமே ஏற்பட்டது; "ஏன் இவர் இந்த வேலைக்கு வந்தார்!" என்றுதான். கனம் மந்திரி ஒன்று பேச, சுந்தரம் அதை வேறு விதமாக மொழி பெயர்க்க, மந்திரியே சிற்சில இடங்களில் கிணறிப்போன மொழி பெயர்ப்பாளருக்கு உதவ,—இப்படி ஒரே கேலிக் கூத்தாக இருந்தது. ஆனால் மந்திரியின் அழகான பேச்சைக் கேட்டவர்களுக்கு மட்டும், "அடடா, எவ்வளவு அழகாகப் பேசினார் மந்திரி. அதைச் சித்திரவதை செய்து விட்டாரே இந்த சுந்தரம்"—என்றுதான் இருந்தது. நாடகக் கழகத்தினருக்கு கனம் மந்திரியிடம் தமாஷாவரி குறித்து உள்ள வஞ்சத்தைக் தீர்த்துக் கொள்ளவே இந்த 'மொழி பெயர்ப்புத் தமாஷ்!' நடந்ததோ என்று கூடச் சந்தேகிக்கத் தோன்றுகிறது எனக்கு!

• • •

" இவ்வளவு ஆபாசமான நாடகம் இது வரையில் நடந்ததே இல்லை!" என்ற 'பெருமை'யை பூரணமாகப் பெற்றது 'பிரம்மச்சாரி' நாடகம். "பொறுப்புணர்ந்த ஒரு பத்திரிகாசிரியர் எழுதித் தயாரித்த நாடகமா இது!" என்று பலர் வருத்தப்பட்டார்கள். 'இவ்வளவு ஆபாசமாக நடிக்க நாடகக் கம்பெனி நடிகைகள் சம்மதித்தால், நாடகக் கம்பெனிகள் அழிவின்றி அமோகமாக நடக்குமே!' என்று நாடகக் கம்பெனிக்காரர்கள் அன்று சொல்லிக் கொண்டார்கள். நிர்வாகிகளுக்கோ அன்று தலைக்குனிவு ஏற்பட்டது. இவ்வளவிலும் மகிழ்ச்சிகரமான ஒரு விஷயம் (இந்த ஆசிரியர் சம்பந்தப்பட்ட) பிரபல வாரப் பத்திரிகையிலேயே, "இவரது அந்த நாடகத்தைக் குறித்து விரஸமாக இருந்தது" என்று பட்டவர்த்தனமான விமர்சனம் வெளி வந்ததுதான்!

அந்தக் கூரிய பார்வை மூலம் குணசா
கரனை வசப்படுத்த முயலுகிருள்
லீலாம்ருதம் "வன சுந்தரி"யில்
(எஸ். வரலக்ஷ்மி)

இவரிடம் நீங்கள் ஏதே
னும் வரம் பெறவேண்
டுமானல் விஜயாவின்
"பாதாள பைரவி"
தமிழ்ப் படத்தைப்
பார்க்கவேண்டும்.



சமீபத்தில் வெளி வந்து வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் ஜூபிடரின் "மர்ம யோகி" தமிழ்ப் படத்தில் அஞ்சலி தேவி.

விண்ட்ஸர் புரொடக்ஷன்ஸின் "கலாவதி" தமிழ்ப் படத்தில் டி. ஏ. ஜெயலக்ஷ்மியும், கே. எஸ். ராஜமும் நடிக்கின்றனர்.

இந்த ஊசியில் வெளிவந்துள்ள கேள்விகள் அவ்வளவும் 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்குக் காணிக்கை அளித்த வாசகர்களின் கேள்விகள்

—ஆசிரியர்

ஏ. பி. வி. பழனிச்சாமி (மார்கய்யன் கோட்டை)

என். எஸ். கிருஷ்ணனும் என். எஸ். சுப்பய்யாவும் உடன் பிறந்த சகோதரர்களா? என். என். கிருஷ்ணனின் விலாஸம் தெரிவிக்கவும்.

இவ்விருவரும் சொந்தக்காரர்கள் அல்ல. விலாஸம்: என்னெஸ்கே பில்ம்ஸ், வெங்கடராமய்யர் தெரு, தியாகராய நகர், சென்னை. 17.

அ. வெ. செல்லம் (மஸ்கேலியா, இலங்கை)

அகில இந்தியப் புகழ் பெற்றுள்ள எம். எஸ். சுப்புலக்ஷ்மி தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

எதிலும் இல்லை.

• • •

சோப்பு, சென்ட், கிரீம் விளம்பரங்களுக்கு சினிமா நக்ஷத்திரங்கள் தங்களுடைய புகைப்படங்களைக் கொடுத்து உதவுகிறார்களே; இது எதனால்?

இது தெரியாதா! அந்த வியாபாரிகளின் தொந்தரவு தாங்க முடியாமல்தான்!

• • •

தங்கள் பத்திரிகைக்கு "குண்டூசி" என்று பெயர் சூட்டியிருப்பதற்குக் காரணம் என்ன?

முதன் முதலாக தமிழ்ப் பத்திரிகை உலகில் கேள்வி-பதில் பகுதியை நான் ஆரம்பித்தபோது "குண்டூசி" என்ற புனை பெயர் வைத்துக் கொண்டு, பதில் அளிக்க ஆரம்பித்தேன். இந்தப் பெயர் ஒரு மஹாமஹ காலத்திற்குள் நேயர்களின் பேரபிமானத்தைப் பெற்றுவிட்டது. அபிமானிகள் பலரது யோசனையின் பேரில், அவர்களுக்கு மிகப் பிடித்ததான அதே பெயரில் "குண்டூசி" பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

லத்தீப் கோசா (இலங்கை)

கே. எல். வி. வஸந்தா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவர் எங்கே இருக்கிறார்? விலாஸம் தெரிவிக்கவும்.

திரை மீது பிரபலமாய் விளங்கிய வஸந்தா, பிரபலம் அடையக் கூடிய படங்களைத் தயாரிப்பதற்காக திரை மறைவிற்குச் சென்றிருக்கிறார். விலாஸம்: C/o கணபதி பிக்சர்ஸ், சேலம்.

• • •

"என் மனைவி" படத்தில் நடித்த மீனலோசனி ஏன் வெகு காலமாய் படங்களில் நடிக்கவில்லை? தற்போது ஏதேனும் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?

இல்லை; அவருக்கும் சினிமா உலகிற்கும் ராசியில்லை என்றுதான் தோன்றுகிறது. ரத்னகுமார் படத்தில் அவர்

"டி. ஆர். ராஜகுமாரியும், எஸ். வரலக்ஷ்மியும் ஏன் இப்படிக் கையைப் பிசைகிறார்களோ" என்று டி. ஏ. மதுரம் ஆச்சரியப்படுகிறார் போலும்—"வனசுந்தரி"யில்.

முதலில் கொஞ்ச பாகத்தை நடித்திருந்தார். ஆனால், முடிவில் ஏதோ மனஸ்தாபம் காரணமாய், அவருக்கு அப்படத்தில் இடம் அளிக்கப்படவேயில்லை.

வி. எஸ். மணி (அரியார்)

நான் அநேகமாய் எல்லா சினிமா நக்ஷத்திரங்களின் போட்டோக்களையும் சேகரித்து அவைகளை என் வீட்டில் அலங்காரமாய் மாட்டியிருந்தேன். என் மனைவிக்கு வந்த கோபத்தில் அவைகளை எடுத்து வெளியில் எறிந்து விட்டாள். சம்பந்தப்பட்ட சினிமா நக்ஷத்திரங்கள் அறிந்தால் கோபித்துக் கொள்வார்களல்லவா?

ஒருக்காலுமில்லை. அணைக்கப்படுவதும் நிராகரிக்கப் படுவதும் அவர்களுக்கு சகஜமான தினசரி விளையாட்டு! அதிருக்கட்டும்; போட்டோக்களில் காணும் பெண்மணிகளின் கோபத்தைப்பற்றி பிரமாதமாய் கவலைப் படும் நீர் நேரில் உம்முடன் உள்ள மனைவியின் கோபத்தைப் பற்றிக் கவலையே படாததேன்?

ஏ. குமாரசாமி (பாலக்காடு)

"ஏழை படும் பாட்"டில் நடிக்கும் குமாரி ராஜத்தைக் கச்சேரிக்கு அழைத்தால் வருவாரா? விலாஸம் என்ன?

தாராளமாய் வருவார் விலாஸம் நெ. 5 கிரிபித் ரோடு தியாகராய நகர், சென்னை. 17.

பி. பி மல்லிகார்ஜுனன் (அரிசிக்கேரா)

பிரபல வைஜயந்திமாலா 'குண்டூசி'யினிடம் ஏன் கேள்வி கேட்கக் கூடாது? கேட்டால் பதில் அளிப்பீரா?

அளிக்கமாட்டேன். இப்பகுதி ரஸிகர்களுக்கே பிரத்தியேகமானது. நக்ஷத்திரங்கள் என்னிடம் கேட்கக்கூடிய கேள்விகளுக் கெல்லாம் நீர் நினைப்பது

போல் சுலபமாய் பதிலளித்துவிட முடியாது?

கே. தங்கவேல் (அரூர்)

நடிகை......கோயமுத்தூரில்....... **கற்பழிக்கப்பட்டது உண்மைதானு?**

சுற்பழிக்கப்பட்டது, காதல் கொண்டது இதைப் பற்றி யெல்லாம் தயவு செய்து என்னிடம் கேட்கவேண்டாம். அதற்கெனத்தான் வேறு பத்திரிகைகள் இருக்கின்றனவே.

எம். சுகுமார் (மீரட்)

பாலாஜியின் லேலா மஜ்னுவில் நடித்த வி. ஆர். ராஜகுமாரி இப்பொழுது எப்படத்தில் நடிக்கிறுர்? விலாஸம் என்ன?

இந்தப் புதிய ராஜகுமாரியை நீர் 'வனசுந்தரி''யில் காணலாம். விலாஸம்:—C/o ஸ்ரீ கிருஷ்ணு பிக்சர்ஸ், தணிகாசலம் செட்டி தெரு, தியாகராயநகர் சென்னை. 17.

க. ராஜாமணி (பம்பாய்)

உங்கள் விளம்பரங்களில் "மெம்பர் ஏ. பி. ஸி." என்று குறிப்பிடுகிறீர்களே? இதன் பொருள் என்ன?

பத்திரிகைகள் ஒவ்வொன்றும் உண்மையில் எவ்வளவு பிரதிகளை விநியோகிக்கின்றன என்பதை ஊடுருவிப் பார்த்து, அத்தாட்சிப் பத்திரம் அளிப்பதற்கென விளம்பரம்செய்வோரால் நடத்தப்படும் ஸ்தாபனம்தான் "ஆடிட் பீரோ ஆப் ஸர்க்குலேஷன்." சாதாரண ஆடிட்டர் அத்தாட்சிப் பத்திரத்தைவிட இந்த சங்கம் அளிக்கும் அத்தாட்சிப் பத்திரத்திற்கு அதிக மதிப்புண்டு. "குண்டூசி" இந்த-சங்கத்தில் சேர்ந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கி வெளியிட்டிருக்கிறது.

* * *

ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்னர் பணம், குணம், அழகு, மூன்றில் எதை முக்கியமாய் கவனிக்க வேண்டும்?

குணமுள்ள பெண்ணுடன் ஆயிசு காலம் பூராவும் (தரித்திரத்தில்) கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைக் காட்டிலும், பணம் உள்ள பெண்ணுடன்



சொற்ப காலமேனும் சுகமாயிருப்பதே மேல் என்று நினைக்கிறேன். அழகெல்லாம் வெறும் வெளிப்பகட்டு தானே?

* * *

மாதுங்காவிலுள்ள "ரிவோலி" டாக்கீஸில் பானுமதியின் படத்தை ஸ்திரீகளின் கக்கூஸிற்குப் போகும் வழியில் மாட்டி யிருக்கிறார்கள். இது பானுமதிக்குத் தெரிந்தால் என்ன செய்வார்?

பம்பாய்க்காரர்கள் தென்னிந்தியர்கள் மீது எவ்வளவு பொறாமை கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவார்! ஆனால், குப்பையில் கிடந்தாலும் மாணிக்கத்தின் மதிப்புக் குறைந்துவிடப் போவதில்லை. அதை அந்த இடத்தில் அலக்ஷியமாய் எறிந்தவர்களின் அறிவீனம் தான் விளம்பரமாகும்.

எஸ். ராமையா (பயலாங், மலாயா)

குண்டூசியாரே! விஜய குமாரியில் நடிக்கும் குமாரி கமலா என் ஹிருதயத்தில் இடம் பெற்றுவிட்டார். அவரை என் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள, உம்மால் உதவி செய்ய முடியுமா?

சினிமா நக்ஷத்திரங்களைக் காதலிப்பது, கல்யாணம் செய்து கொள்ளுவது அல்லது காதலிப்பவர்களுக்குக் கல்யாணம் செய்து வைப்பது—இதெல்லாம் எனக்குத் தெரியாத விஷயம், ஐயா! அதெல்லாம் தெரிந்திருந்தால் நான் "குண்டூசி" ஆசிரியராக இருக்கமாட்டேனே! ஒரு நக்ஷத்திரத்தின் பின்னு லல்லவா போய்க் கொண்டிருப்பேன்!

ஏ. தாமஸ் (ரூவான் வெல்ல, இலங்கை)

வைஜயந்தி மாலா கொழும்பிற்கு வரப்போவதாகக் கேள்விப்படுகிறேன். எப்பொழுது வருவார்?

தற்போதைக்கு அவர் இலங்கைக்குப் போவதாக இங்கு நான் கேள்விப்படவில்லை. வரும்போது தெரிவிக்கிறேன்.

இ. செல்லப்பன் (அழகனுபுரம்)

என். எஸ். கிருஷ்ணனின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தவரும், நல்ல தம்பியில் நடித்தவருமான எஸ். கே. ஸ்வாமி சொந்த ஊர் வந்திருக்கும் காரணம் என்ன?

"சீதோஷ்ண மாறுதல் உடலுக்கு நலன் அளிக்கும்" என்று ஒருவேளை "அசோக் குமார்" வைத்தியர் கூறியிருக்கக்கூடும்?

எஸ். வி. பெருமாள் (அழகனுபுரம்)

"திகம்பர சாமியாரி"ல் ஏழுமலை வண்டி ஓட்டுகிறாரே, அந்தக் காளைகள் எங்கே கிடைக்கும்?

யாராவது மாட்டு வியாபாரியிடம் கேளும், ஐயா, இந்தக் கேள்வியை!

எஸ். கணேசன் (பூவாளூர்)

1946-ம் வருஷம் மே மாதத்தில் வெளிவந்துள்ள ஒரு சினிமாப் பத்திரிகை விளம்பரத்தில்—"டி. ஆர். மஹாலிங்கம், கே. மாலதி, சந்தான லக்ஷ்மி, கே. மஹாதேவன் புளிமூட்டை, ஆழ்வார் குப்புசாமி முதலியோர் நடிக்கும் உஷா தமிழ்ப் படம் கார்த்திகேயா பிக்சர்ஸாரால் தயாரிக்கப் படுகிறது"—என்றுள்ளது. இந்தப் படம் வெளிவந்து விட்டதா? அல்லது தயாரிக்கப்படவே யில்லையா?

"வனசுந்தரி" கதாநாயகன் பி. யு. சின்னப்பா ஒய்வெடுத்த படியே ஏதோ தீவிரமாய் யோசிக்கிறார் போலிருக்கிறது.

Prize winners of C. No. 43

Ist Prize 1. M. Indumati, Berhampur, 2. S. R. Mohpatra, Nimpara, 3. Prabhakarao, Hyderabad Dn, 4. S. Imam Ashraf, Basti, 5. M. V. Subramaniam Dindigul IIIrd, 1. R. S. Ahluwala, Ludhiana, 2. Prabhakarao, Hyderabad Dn. 3. C. V. M. Reddy, Chikballapur, 4. M. R. Choudhury, Calcutta 5. A. Ramanadhiah, Nellore, 6. Beharam, Kanpur, IV prize Om Prakash Gupta, Dehra Dun and Vth Prize, 1. Moganlal, Jamshedpur, 2. B. N. Dass, Sambalpur, 3. M. S. U. Farooqui, Allahabad.

Full particulars are published in the Rainbow dated 10th Feb. 51.

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 45

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியானவிடைக்கு 5-ம் பரிசு ரூ 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS
KEY 8 NO. 43 59 TO 74 = 266

69	66	63	68
72	59	62	73
60	71	74	61
65	70	67	64

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 43 on 19.12.50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramamurthy 29.1.51
Agent, Madras

முடிவு தேதி 26—2—51. விடை 12—3—51.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5—0—0

274

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்;—61 முதல் 76 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும்; எப்படிக் கூட்டினாலும் 274 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்**:—தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

THE RAINBOW COMPETITIONS No. 45. 306 (21) Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 46

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 12-3-51. விடை:27-3-51.

278

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ.1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—62 முதல் 77 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 278 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

The Rainbow Competitions, No. 46,
306. (21) Mint Street, Madras—1.

நீர் சந்தேகித்தது சரிதான்; இப்படம் தயாரிக்கப்படவேயில்லை.

லக்ஷ்மணன் (கூரியானூர்)

"அமர கவி படம் வருகிறது—வருகிறது" என்று இரண்டு வருஷ காலமாய் கூறுகிறார்களே. ஏன் வெளிவரத் தாமதம்?

உள்ளூர்க் கவிராயராயிருந்தால் ஒரே நாளில் உம் முன் கொண்டுவந்து நிறுத்திவிடலாம் இவர் அமர கவி பாரும்; இவரை தேவலோகத்திலிருந்தல்லவா அழைத்து வரவேண்டியிருக்கிறது!

• • •

எம். எஸ். சுப்புலக்ஷ்மி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவருக்கு சங்கீதம் கற்பித்த குரு யார்?

சென்னைப் புறங்களில் "எம். எஸ். ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர்" என்று லேசாகக் கூறுவார்கள்! ஆனால், மதுரைப் பக்கங்களிலோ "இசை வேளாளர் ஜாதியைச் சேர்ந்தவர்" என்று அழுத்தமாகக் கூறுவார்கள். முதலில் அவருக்கு சங்கீதம் கற்பித்தவர் அவரது தாயார் (வீணை) ஷண்முக வடிவு; பிறகு அநேகர்.

விஜயா புரொடக்ஷன்ஸின் "பாதாள பைரவி" தமிழ்ப் படத்தில் கே. மாலதியும், என். டி. ராமராவும் பிரதம பாகங்களில் தோன்றி நடிக்கும் காட்சிகளில் இது ஒன்று.

கே. எஸ். செல்லப்பா (யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்முகா சினி பிலிம் கம்பெனி சென்னை ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் "நாக லோகம்" என்ற படத்தைத் தயார் செய்கிறார்களாமே? இதுவரை எவ்வளவு தயாராகியிருக்கிறது?

அப்படி ஒரு செய்தி வெளியானதுடன் நிற்கிறது!

கே. சுப்பையா பிள்ளை (பம்பாய்)

சினிமாவில்நடிக்கும் பெண்கள் தங்கள் கற்பை இழக்காமலிருக்கமுடியாதென்று எண்ணுகிறேன். சரிதானா?

சினிமா உலகிலுள்ள பெண்கள் இவ் விஷயத்தை (உம்மைப் போல்) ஒரு பிரச்னையாகக் கருதவில்லையே!

எம். இ. தங்கள் மைதீன் (மைலம்பட்டி)

மந்திரி குமாரியில் "என் எருமைக் கன்றுக்குட்டி" என்ற பாட்டைப் பாடியிருப்பவர் யார்? அவரது விலாஸம் என்ன?

மாஸ்டர் சுப்பய்யா, C/o மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.

பி. ஏ. ரவுப் (ஆம்பூர்)

நரசிம்ம பாரதி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவர் முதன் முதலில் நடித்த படம் எது? அவரது சொந்த ஊர் எது?

பாரதி சௌராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவர். அவர் முதன் முதலில் நடித்த படம் "பக்த மீரா". சொந்த ஊர் மதுரை.

எம். எம். பழனிவேல் (மன்னார்)

என் நண்பரொருவர் கடையில் சேர்ந்திருக்கிறார். அவரை இப்பொழுது பார்க்கிறவர்களும், முன்னால் பார்த்தவர்களும் அவரை ஒரு முட்டாள் என்கிறார்கள். நீர் என்ன சொல்லுகிறீர்?

நண்பர் விஷயமிருக்கட்டும். உம்முடைய கேள்வியென்னவோ புத்தி

சாலித்தனமான கேள்வியாய் தோன்ற வில்லையே!

கே. என். ஸீ. பிள்ளை (வடி நாகர்கோயில்)

சினிமா நடிகைகளை காலால் மிதிப்பதாகவெல்லாம் தமிழ்ப் படங்களில் காட்டுகிறார்களே, இது சரியா?

நடிகைகளின் மார்பகத்தைத் தப்புறவாகக் காட்டுவதை விட—ஒரு பெண் விளக்குமாற்றுப் பிரயோகம் செய்வதை விட—இது மோசமானது என்று நினைக்கிறீர் நீர்!

பி. எஸ். வாஸன் (தாராபுரம்)

ஜெமினியில் ராதா, ரஞ்சன் இவர்களுடைய மாதச் சம்பளம் எவ்வளவு?

ரஞ்சன் ஜெமினியிலிருந்து விலக்கப்பட்டு விட்டார். ராதாவுக்கு தற்போது மாதச் சம்பளம் ரூ. 1850.

* * *

செண்ட்ரல் ஸ்டுடியோவை ஜூபிடர் எடுத்திருந்த குத்தகை காலம் தீர்ந்து விட்டதா? இல்லையென்றால், இன்னும் எத்தனை காலத்திற்கு உள்ளது?

குத்தகை காலம் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு உள்ளது.

எம், ஜெயராம் (கடலூர் என். டி.)

"பரணி லைலா மஜ்னு"விலும், பாலாஜி லைலா மஜ்னுவிலும் வரும் பாலைவனக் காட்சிகள் எங்கே தயாரிக்கப்பட்டன?

சென்னை ஸ்டுடியோக்களில்!

கே. தங்கவேல் (அரூர்)

சில கதாசிரிய—வசன 'மேதைகள்' தம் சுயநலத்திற்காக தற்போதைய சர்க்காரை தூஷிக்கும் மாதிரியில் கதையையும் வசனங்களையும் எழுதிப் படங்களில் காட்டுவது சரியா?

அவர்கள் ஜனங்களின் வெறுப்பிற்குப் பாத்திரமாவதைத் தடுத்து, அவர்களது 'தனிநபர் சுதந்திர'த்தைப் பறிப்பதற்கு நம் குடியரசுச் சட்டம் இடம் கொடுக்காதோ என்றுதான் சென்னை சர்க்கார் சும்மா யிருக்கின்றனர் போலும்!



வி. பி, சார்ஜ் தனி

வியாபாரிகளுக்கு சலுகை உண்டு

அப்பர் & கோ.,

(சிவஞானம் பார்க் அருகில்)

3, ரத்ன முதலி தெரு,

கொண்டித்தோப்பு : : சென்னை-1

காட்சிசாலை : 88, நாராயண முதலி தெரு,

சென்னை-1

நக்ஷத்திரம் பிறந்த நாள்

பிப்ரவரி

பிப்ரவரி மாதத்தில் பிறந்துள்ள பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் ஐவர், இவர்களில் ஒருவர் ஸ்திரீ-ஸ்டன்ட் நக்ஷத்திரம்; ஆனால் இன்னொருவரோ சாத்வீகமான குணசித்ர நடிகர். மற்ற மூவருள் இருவர் நடன-நக்ஷத்திரங்கள்; ஒருவர் சங்கீத நக்ஷத்திரம். இவர்களின் தொழில் விவரங்களைக் கவனிக்கையில், பிப்ரவரி மாதத்தில் பிறந்த நக்ஷத்திரங்களுக்கு அதிர்ஷ்டம் அதிகம் துணைபுரியவில்லை என்பதை அறியலாம்.

ஆர். பி. லக்ஷ்மி தேவி

2

மௌனப் பட காலத்தில், காலஞ்சென்ற டைரெக்டர் ஸி. வி. ராமனால் சினிமாவில் புகுத்தப்பட்ட ஆர். பி. லக்ஷ்மி தேவி, அவரது சகோதரர் ஏ. நாராயணன் தயாரித்த "ஸ்ரீநிவாஸ கல்யாணம்" பேசும் படத்தில் முதன் முதலாக நடித்தார். பிறகு அவர் 'ஸ்டன்ட்' நடிகையாக மாறி பல பம்பாய் (தமிழ்ப்) படங்களில் தோன்றியிருக்கிறார். தற்போது ஓய்வில் ஆழ்ந்திருக்கும் அவரது 34-வது பிறந்தநாள் இம்மாதம் 2ந் தேதி ஆகும்.

சுப்பய்யா பிள்ளை

4



பழம் பிரபல நாடக நடிகர் ராஜபார்ட் கோவிந்தசாமி பிள்ளையின் வேலையாளனாக நாடக உலகுடன் சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, (தம் மனோபீஷ்டப்படி) நாடக நடிகரானவர் சுப்பய்யா பிள்ளை. பல நாடகக் கம்பெனிகளில் நடித்துவிட்டு, என். எஸ். கிருஷ்ணனின் உதவியால் "நவீன விக்ரமாதித்தன்" படத்தின் மூலம் சினிமா நடிகரானார். மங்கம்மா சபதத்தில் தகப்பனார் வேஷத்தை மிக பாராட்டக்கூடியபடி நடித்து, தாம் சிறந்த குணசித்ர நடிகர் என்பதை நிரூபித்தார். நம் நடிகர்களுள் வயது முதிர்ந்தவர்களில் சுப்பய்யா பிள்ளை ஒருவர். அவர் 1895ம் வருஷத்தில் பிறந்தவர்.

ஏ. ஆர். சகுந்தலா

உப நடிகையாக சினிமாவில் பிரவேசித்து, ஒருசில படங்களில் நடனம் ஆடி நடித்த பின், நடன உலகில் (நடனம்) நடராஜுடன் துள்ளிக் குதித்து, இருவரும் புகழேணியின் உச்சிக்குத் தாவினர். ஆனால், ஏணி சரிந்தது; இருவரும் பிரிந்தனர். சமீபத்தில் இவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்துவிட்டனர். பழையபடி இவர்கள் மேடையில் ஆடவும் தொடங்கியுள்ளனர். அடுத்த வருஷம் முதல் சகுந்தலா பழையபடி பிறந்த நாளைக் கொண்டாடவும்கூடும். இம் மாதம் 5ഢ அவர் தம் 25-வது பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கவேண்டும்.

டி. ஆர். ரஜனி

உப பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கி, பல வருஷ உழைப்பிற்குப் பிறகு "மதனமாலா"வில் கதாநாயகியாக நடிக்கும் பாக்யம் பெற்றவர் டி. ஆர். ரஜனி. பாடத் தெரியாவிட்டாலும் ஆடத் தெரிந்தவரான ரஜனி படங்களைவிட பத்திரிகை விளம்பரங்கள் மூலமே அதிகமாய் பிரசித்தி பெற்றுள்ளார். அவர் தற்போது "சௌதாமினி"யில் நடிக்கிறார். இம் மாதம் அவருக்கு 23-வயது பூர்த்தியாகிறது.



கொத்தமங்கலம் சீனு

ஆரம்பத்தில் கிராமபோன் பிளேட் மூலம் பிரசித்தி பெற்று நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, சினிமாப் படங்கள் பலவற்றில் நடித்துப் பிரபலம் அடைந்துள்ளவர்—கொத்தமங்கலம் சீனு. அவர் நடித்த முதல் படம் லோட்டஸ் "சாரங்கதரா." கடைசியாக நடித்துள்ள படம் "துளஸி ஜலந்தர்." அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் அதிகம் பெறாத (1910ம் வருஷத்தில் பிறந்தவரான) சீனு தற்போது ரேடியோவிலும், மேடையிலும் கச்சேரிகள் செய்வதோடு மட்டும் இருந்துவருகிறார்.

இது செய்தி

புதுப் படங்கள்

கைலாஸ் பிக்சர்ஸார் அடுத்தபடியாக **தொழிலாளி** என்ற சமூகப் படத்தைத் தயாரிப்பார்களென்று தெரிகிறது. இப் படம் தமிழ்-மலையாளம் இரு பாஷைகளிலும் தயாரிக்கப்படுமாம். படம் சேலம், ரத்னு ஸ்டுடியோவில் டி. ஜானகிராமன் டைரெக்ஷனில் தயாரிக்கப்படும்.

சேலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அசோக் பிலிம்ஸார், நாடகமாக நடிக்கப்பட்டுப் பிரசித்தி பெற்ற **என் தங்கை** சமூகக் கதையைப் படமாக்க திட்டமிட்டிருக்கிறார்களாம்.

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள டி. எஸ். ஆர். ப்ரொடக்ஷன்ஸார் **ரஞ்சனு** என்ற ஒரு நாடோடியின் கதையைப் படமாகத் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தில் நடிக்க நாகர்கோயில் மஹாதேவன், பி. எஸ். கோவிந்தன், சாந்தாதேவி, டி. வி. குமுதினி, புளிமூட்டை முதலியவர்களை ஒப்பந்தம் செய்திருக்கிறார்களாம்.

வாஸனின் வெற்றி

ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் சினிமாத் துறையில் பல வெற்றிகளைக் கண்டவர். வடநாட்டவரை பிரமிக்கும் படி காரியங்களைசாதித்திருக்கிறார். ஆனால் இவைகளை யெல்லாம் விட மாபெரும் வெற்றி ஒன்று அவருக்கு சமீபத்தில் கிடைத்தது. ஜெமினி **மங்களா** ஹிந்திப் படம் பம்பாயிலும் சென்ற வருஷம் டிஸம்பர் மாதம் 22-ம் தேதியே திரையிடப்பட்டிருக்க வேண்டிய சமயம், பம்பாய் சர்க்கார், படம் 'நீளக் கட்டுப்பாட்டை மீறியிருப்பதாக'க் குற்றம் சாட்டி, அப்படத்தை பம்பாய் மாகாணத்தில் எங்குமே திரையிடக் கூடாதென தடை உத்தரவு பிறப்பித்தார்கள். ஸ்ரீ. வாஸன், "இம்மாதிரி ஒரு மாகாண சர்க்கார் செய்வது அவர்களுடைய அதிகார வரம்புக்கு மீறிய செயலாகும். இது இந்திய அரசியல் சட்டத்தில் கண்டுள்ள மூலாதார உரிமைக்கு முரணானது" என்று எடுத்துக் காட்டி பம்பாய் மாகாண சர்க்கார் மீது வழக்குத் தொடர்ந்தபோது நாட்டிலே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவரது வழக்கை அங்கீகரித்து பம்பாய் ஹைக்கோர்ட், இம்மாதம் 2-ம் தேதிக்குள் பதில் தெரிவிக்கும்படி பம்பாய் சர்க்காருக்கு நோட்டீஸ் விடுத்தது. ஆனால், சென்ற மாதம் 29-ம் தேதி, பம்பாய் சர்க்கார் ஒரு அறிக்கையின் மூலம் தனது உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டது. இது ஸ்ரீ. வாஸனின் மகத்தான வெற்றியாகும். தமிழ் நாட்டில் இப்போது ஹிந்திப் படங்கள் தயாரித்து வரும் வேறு பலருக்கு ஸ்ரீ. வாஸனின் தீரமான இச் செய்கை, கண்டிப்பாக ஒரு தைரியத்தை அளித்திருக்கிறது. ஸ்ரீ. வாஸனை அவரது வெற்றி குறித்துப் பாராட்டி பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்களிடம் அவர், இது தமது சொந்த வெற்றி அல்ல வென்றும், தாம் நீண்ட காலமாக சினிமாப் படத் தொழில் பாதிக்கப்படா வண்ணம் பாடுபட்டு வந்ததாகவும், அதற்குப் பலன் கிடைத்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பானுமதிக்கு அபராதம்

தனது பங்களா காலியானதை ஜாகை தாசில்தாருக்குத் தெரிவிக்காததற்காகவும், குடியிருப்புக்கான இடத்தை அதற்கல்லாத வேறு காரியத்திற்காக வாடகைக்கு விட்டதற்காகவும் நடிகை பானுமதிமீது நடைபெற்று வந்த வழக்கில் சென்ற மாதம் 31-ம் தேதி மாஜிஸ்டிரேட் நடிகைக்கு ரூ. 100 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

நாகய்யாவுக்கு பாராட்டு விழா

காரைக்கால், கதம்ப நிலையத்தினர் நடிகர் வி. நாகய்யாவை பாராட்டி, இம் மாதம் 1-ம் தேதி விழா நடத்தினர்கள். அசோகச் சின்னம் பொறிக்கப்பட்ட பெரிய வெள்ளி 'கப்' ஒன்றை நிலையத்தார் அவருக்குப் பரிசளித்தனர்.

வாழ்த்துகிறோம்

பிரபல விகடகவியும், சம்சார நௌகா படத்தில் நடித்துள்ளவருமான விகடமணி ஆர். கே. மூர்த்தி, பிரபல பாடகியும், பல படங்களுக்குக் குரல் இரவல் கொடுத்து வருபவருமான ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரியைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். சென்ற மாதம் 25-ந் தேதி திருப்பதியில் இவ்விவாகம் சாஸ்திரோக்தமாக நடைபெற்றது. இந்த விவாகத்தை யொட்டி பாடகியின் பங்களாவில் சென்ற மாதம் 31ம் தேதி ஒரு வரவேற்பு நடைபெற்றது. சிஷ்யையின் மண வரவேற்பில் குரு (ஜி. என். பி) வின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. சினிமா, பத்திரிகை, சங்கீத உலகப் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து பரிசுகள் வழங்கி ஆசி கூறினார்கள்.

சமீபத்தில் தம்பதிகள் ஆகியிருக்கும் விகடம் ஆர். கே. மூர்த்தியும், சங்கீதம் எம். எல். வஸந்தகுமாரியும்.

• • •

பல படங்களில் நடித்துள்ள சோமு என்ற ஸ்ரீ. ஆர். எம். சோமசுந்தரம் சௌ. ராஜேஸ்வரியை சென்ற மாதம் 28-ம் தேதி திண்டுக்கல்லில் மணந்து கொண்டார்.

• • •

'கல்கண்டு' பத்திரிகை ஆசிரியர் 'தமிழ்வாணன்' வாழ்க்கை இனி ரொம்பவும் இனிப்பாக இருக்கும். சென்ற மாதம் 28-ம் தேதி சௌ. மணிமேகலை அவரது வாழ்க்கைத் துணைவியானார், அமராவதி புதூரில்.

• • •

சமீப காலத்தில் மதுரையில் இவ்வளவு சிறப்பான விவாகம் நடைபெற்றதே இல்லை என்று பிரமிக்கும்படி நடந்தது பிரபல கிரிக்கெட் நக்ஷத்திரம் ஸ்ரீ. என். கண்ணையிரத்தின் திருமணம். மதுரையிலும், சுற்றுப் புறங்களிலும் பிரபலமானவரும், மதுரை சென்ட்ரல் சினிமாக் கொட்டகையின் பாகஸ்தருமான ஸ்ரீ.கே. நடராஜ பிள்ளையின் மகன் ஸ்ரீ. என். கண்ணையிரம், சௌ. மீனுவைத் திருமணம் செய்து கொண்டதையே குறிப்பிடுகிறேன். மணமகள் தாண்டிக்குடியிலுள்ள பிரபல தோட்ட சொந்தக்காரர் ஸ்ரீ. என். எஸ். சோமசுந்தரம் பிள்ளையின் புதல்வி ஆவர். அன்று மாலை கே. பி. சுந்தராம்பாளின் இன்னிசைக் கச்சேரியுடன் வரவேற்பு நடைபெற்றது. தம்பதிகளுக்குப் பரிசுகளும் ஆசிச் செய்திகளும் ஏராளமாய் வந்து குவிந்தன.

• • •

தமது ஹாஸ்யச் சித்திரங்கள் மூலம் பலரை மகிழ்வித்து வரும் "ஆனந்த விகடன்" சித்திரக்காரர் (கோபுலு) எஸ். கோபாலன், சௌ. மைதிலியை இம்மாதம் முதல் தேதி மணந்து கொண்டார், கும்பகோணத்திலே.

தம்பதிகள் அனைவருக்கும் "குண்டூசி" யின் மனமார்ந்த ஆசிகள்.

வரலக்ஷ்மி மீது வழக்கு

நடிகை வரலக்ஷ்மி மீது, அவருடைய கார் டிரைவராயிருந்த தாண்டவராயன், நடிகை தன்னை செருப்பால் அடித்து அவமானப்படுத்தியதாக ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். டிரைவர் தனது புகாரில், தான் நடிகையின் கார் டிரைவராக இருந்ததாகவும், நடிகர் டி. ஆர். மஹாலிங்கம் வற்புறுத்திக் கேட்டதனால், நடிகையின் வீட்டிற்கு ஒரு ஆந்திராக்காரர் வந்து போவதைத் தாம் அவரிடம் தெரிவித்ததாகவும், அதற்காகத் தன்னை நடிகை செருப்பால் அடித்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார். விசாரணை நடைபெற்று வருகிறது.

அரங்கேற்றங்கள்

நாடக ஆசிரியரும், அமெச்சூர் நடிகருமான ஸ்ரீ. வி. எஸ். விஸ்வநாதன் தமது மருமகள் மிஸ். ராஜம்மாளின் சங்கீத அரங்கேற்றத்தை சென்ற மாதம் 22-ம் தேதி நடத்தினர். அரங்கேற்று விழாவுக்கு மாஜி ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் தலைமை வகித்தார்.

மாயூரத்தில் முகாமிட்டு நாடகங்கள் நடத்திவரும் ஸ்ரீ தேவி நாடக சபையினர் சென்ற மாதம் 28-ம் தேதி "அழகி" என்ற நாடகத்தை அரங்கேற்றினர்கள். "அழகி", 'புதுமைப்பிரியன்' என்ற எழுத்தாளரின் சிருஷ்டியாகும்.

'தாரணு' ஆரம்ப விழா

கிருஷ்ணு மூவிடோனின் தாரணு ஹிந்திப் படத்தின் ஆரம்ப முகூர்த்த விழா சென்ற மாதம் 14-ம் தேதி பம்பாய், ஸ்ரீ ஸவுண்ட் ஸ்டுடியோவில் நடைபெற்றது. இப்படத்தில் மதுபாலா, திலீப் குமார் ஆகிய இருவரும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

பம்பாய் தமிழ்ச் சங்கம்

பம்பாய் தமிழ்ச் சங்கத்தினருக்காக போலீஸ் இலாகா மந்திரி ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் உருவப்படத்தை செய்தி இலாகா மந்திரி கனம் ஆர். ஆர். திவாகர் சென்ற மாதம் 25-ம் தேதி பம்பாயில் திறந்து வைத்தார்.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாஸம்:

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G.M.)

JULLUNDUR CITY.

சிவனின் சஷ்டியப்த பூர்த்தி விழா

பிரபல சாஹித்யகர்த்தாவான ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் அறுபதாவது ஆண்டுநிறைவு விழா சென்ற மாதம் 20-ம் தேதி, சிறப்பாக நடைபெற்றது. திருவல்லிக்கேணி, தேசீய உயர்தர பெண் கலாசாலையில், சென்னை பிரதமர் கனம். பி. எஸ். குமாரஸ்வாமி ராஜாவின் தலைமையில் விழா நடைபெற்றது. சஷ்டியப்த பூர்த்திக் கொண்டாட்டக் கமிட்டியின் தலைவர் ஸ்ரீமதி ருக்மணி தேவி தமது வரவேற்புரையில், சிவனது சாஹித்யங்களில் வேதாந்தக் கருத்துக்களின் அழகு ஆனந்தத் தாண்டவம் புரிகிறது என்றும், அவரை அவரது ஆயுள் காலத்திலேயே கௌரவிப்பது சந்தோஷகரமான விஷயம் என்றும் குறிப்பிட்டார். பிறகு மற்றும் பலர், தமிழ் சங்கீதத்துக்கு ஸ்ரீ. சிவன் செய்துள்ள சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். தலைமை வகித்த பிரதமர் பேசுகையில், ஸ்ரீ. சிவன் சங்கீதத்துறையில் செய்துள்ள சேவைகளைப் பற்றி தாம் கேள்விப்பட்டிருப்பதாகவும், சினிமாக் கலையில் தம் சாஹித்யங்கள் மூலம் அவர் கைங்கரியம் செய்துள்ளதாகவும், அவரது உருவமே ஏழைமை, எளிமை, பெருந்தன்மை ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது என்றும் கூறினர். காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ. சிவனுக்கு அனுப்பியிருந்த 'சிவபுண்ய கான மணி' என்ற பட்டத்தை பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவரிடம் அளித்தார். பிரதமர் ரூ. 1500 கொண்ட ஒரு பண முடிப்பையும், சால்வையையும் சன்மானமாக வழங்கினர். உபசாரங்களுக்கு பதிலளிக்கையில் ஸ்ரீ. சிவன், தாம் தமிழிசைக்குத் தம்மாலியன்ற தொண்டு புரிந்து வந்துள்ளதாயும், தமக்குச் செய்யப்படும் கௌரவம் தமிழன்னைக்குச் செய்யப்படுவதாகவே தாம் கருதுவதாகவும் தெரிவித்துக் கொண்டார்.

கடைசியாக பிரபல சங்கீத வித்வான், சினிமா நக்ஷத்திரங்கள், பாடகிகள், முதலியோர் ஸ்ரீ. சிவனது பல சாஹித்தியங்களைப் பாடினர்கள். சரஸ்வதிகான நிலைய மாணவிகள் ஸ்ரீ. சிவனின் 'சிதம்பரம்' என்ற பாட்டிற்கு அபிநயம் பிடித்து ஆடினர்கள்.



பிரபல (சினிமா) சாஹித்ய கர்த்தா பாபநாசம் சிவனுக்கு "சிவ புண்ய கான மணி" என்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

நிரந்தர நடிகையல்ல !

ஜூபிடர் படங்களில் ஹாஸ்ய பாகங்களில் நடித்துவரும் எம். எஸ். எஸ். பாக்கியம் ஏன் மற்றவர்கள் படங்களில் நடிப்பதில்லை?' என்ற நேயர்களின் கேள்வி இனி மேல் ஏற்படாது. காரணம் இவ்வளவு காலம் ஜூபிடரின் நிரந்தர நடிகையாக இருந்துவந்த இந்த நடிகை, அவர்களுடைய அநுமதியுடனும், ஆசியுடனும் வேறு வெளியார் படங்களிலும் நடிக்கப் போவதுதான். இனிமேல் ரஸிகர்கள் எம். எஸ். எஸ். பாக்கியத்தை ஜூபிடர் படங்களில் மட்டுமன்றி, வேறு படங்களிலும் காணலாம் !

படமுதலாளிகள் சங்க எதிர்ப்பு

இம்மாதம் 2-ம் தேதி பம்பாயில் படத்தயாரிப்பாளரின் விசேஷக் கூட்டம் ஒன்று கே. எம். மோடி தலைமையில் நடைபெற்றது. இந்திய சர்க்கார் படத் தணிக்கைக் கட்டணத்தை 7 மடங்கு அதிகரித்திருப்பதைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர்கள். 'ஏற்கனவே அதிகமான வரிப் பளுவினல் அவதிப்படுகிறது சினிமாத்தொழில். அதுவும் இப்பொழுது தொழிலில் ஒரு அபாயகரமான மந்த நிலை ஏற்பட்டிருக்கும் சமயம் சர்க்கார் இப்படிச் செய்திருப்பது தொழிலையே அழிப்பது போலாகும்' என்று தலைவர் எடுத்துக் கூறினர்.

ஹோமியோ ஹவுஸ்

டாக்டர் வி. ஆர். மூர்த்தி, ஹோமியோபதி வைத்தியத்தில் கல்வி போதிப்பதற்கான ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து, சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறார். தமது ஸ்தாபனத்திற்கென ஒரு சொந்தக் கட்டிடத்தைக் கட்டித் திறப்பு விழா நடத்துகிறார் என்றால் அதற்கு அவரது முயற்சியில் கிடைத்த ஆதரவும் வெற்றியும்தான் காரணம். சென்ற மாதத் கடைசியில் மேற்படி கட்டிடத்தின் கிரஹப் பிரவேசம் சாஸ்திரோக்தமாக நடந்து முடிந்தது. 'ஹோமியோ ஹவுஸ்' என்ற இப் பெரிய கட்டிடத்திலேயே இன்ஸ்டிட்யூட், வைத்தியசாலை, லாபரெட்டரி எல்லாம் இருக்கின்றன. இதன் ஆரம்ப விழா இம் மாதம் 11ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. கும்பகோணம், ராம விலாஸின் ஜில்லா மானேஜர் ஸ்ரீ. எஸ். ஆரோக்கியசாமி பிள்ளையவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். கும்பகோணம் முனிசிபாலிடி கமிஷனர் ஸ்ரீ. கே. ராமலிங்கம் எம். ஏ., விழாவுக்குத் தலைமை வகித்தார். எம். கே. டி, பாகவதர் இவ் விழாவில் கலந்துகொண்டு, ரஸமாகப் பேசி, தேசிய கீதம் பாடினார்.

வாழ்த்துகிறோம்

சென்னை பெஸ்ட் ஆண்டு கம்பெனி டைரெக்டரான ஸ்ரீ. எஸ். எஸ். டி. சாரி தமது புத்திரி சௌ. கோமளவல்லியின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினார். மணமகன் பிரபல மோட்டார் வியாபாரிகளான டி. வி. சுந்தரமய்யங்காரின் பேரன் சிரஞ்சீவி. எஸ். விஜயராகவன் சென்ற மாதம் 28ம் தேதி இவ்விவாகம் சேத்துப்பட்டில் சிறப்பாக நடந்தது.

பிரம்மோபதேசம்

நமது பத்திரிகையின் ஆடிட்டரான ஸ்ரீ. கே. கோபாலகிருஷ்ண ராவ் எப். ஸி. ஏ. அவர்கள் தமது பேரன் (ஸ்ரீ. கே. கணபதி ராவின் புத்திரன்) சிரஞ்சீவி கே. லக்ஷ்மிபதிக்கு சிறந்த முறையில் பிரம்மோபதேசம் செய்து வைத்தார். அதை ஒட்டி, இம்மாதம் 11-ம் தேதி நண்பர்களுக்கு ஒரு தேநீர் விருந்தளித்தார் நாட்டியக் கச்சேரியும் நடந்தது.

இனாம்! இனாம்! இனாம்!

ஜாலக் கண்ணாடி

இந்த ஜாலக் கண்ணாடி வசீகரண சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. இந்தக் கண்ணாடியில் பார்த்தால், உங்கள் நிகழ்காலம். இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் சரியாகத் தெரிந்து கொள்ளலாம். இறந்த உறவினர்களைக் காணலாம்; அவர்களுடன் பேசலாம். காணாமற்போன சாமான்களோ, பணப் புதையலோ உள்ள இடங்களை அறியலாம். ஒரு காரியத்தில் வெற்றி கிடைக்கும் கிடைக்காது என்பதையும் இது தெரிவிக்கும். காதல், உத்தியோகம் வியாபாரம். வழக்குகள், பரீக்ஷை முதலியவைகளில் வெற்றி கிடைக்குமா என்பதை இக் கண்ணாடி தெரிவிககும்.

விலை: ஸ்பெஷல் ரகம் ரூ. 4-8-0. மின்சார சக்திபோல் தவறாமல் பலனளிக்கும் விசேஷ ஸ்பெஷல் ரகம் ரூ. 10. தபால் செலவு தனி. பலனில்லையேல் பணம் வாபீஸ்.

இனாம்: இந்தக் கண்ணாடி வாங்கும் ஒவ்வொருவருக்கும் ஸ்பெஷல் "ஜால மோதிரம்" இனாமாக அனுப்பப்படும். இந்த மோதிரத்தை அணிந்தால் சகல விஷயங்களும் சித்திபெறும். ஒருமுறை பரீக்ஷித்தால் இதன் உண்மைப் பலனை அறியலாம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

The BENGAL MESMERISM HOUSE (G. M.) NAKODAR, Pb.

சென்னைக்கு ரஷ்யக் கலைஞர்கள் விஜயம்

தொழில் பிரமுகர்களின் உத்ஸாகமான வரவேற்பு

இன்று நம் நாட்டிலுள்ள பல சினிமா டைரெக்டர்களும், காமிராமென்களும் பயிற்சி பெற்றது எந்தப் பள்ளியிலுமல்ல. பிரபல ரஷ்ய டைரெக்டர் புடோகின் எழுதியுள்ள 'பிலிம் டெக்னிக்' சம்பந்தமான புஸ்தகங்கள் தான் அவர்களின் குரு. அந்தப் பிரபல ரஷ்ய டைரெக்டர் புடோகின், சென்ற மாதம் இரண்டாவது வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார் அவருடன்கூட பிரபல ரஷ்ய நடிகர் என். ஸெக்காஸோவ் என்பவரும் வந்திருந்தார். இந்தியாவின் கலை, கலாசாரங்களைத் தெரிந்து கொள்வதற்கே இவர்களிருவரும் வந்திருந்தார்கள். அவர்கள் பம்பாயில் சில தினங்கள் தங்கியிருந்தனர். பம்பாய், அந்தேரியிலுள்ள மாடர்ன் ஸ்டுடியோவில் இரு ரஷ்யக் கலைஞர்களுக்கும் ஒரு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பம்பாய் பட உலகப் பிரமுகர்கள் பலரும் வரவேற்பில் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து வெள்ளிப் பேழையில் வைத்துக் கொடுக்கப்பட்டன, கல்கத்தாவைச் சேர்ந்த ஸ்ரீ. சௌத்திரி பேசுகையில் ரஷ்ய-இந்திய கலாசார உறவு வளர வேண்டுமென்றும் அதற்கு அடையாளமாக ரஷ்யா இந்தியாவுக்கு வெத்துபிலிம், சினிமா இந்திரங்களை அளிக்க முன்வர வேண்டும் என்றும் கூறினர். கலைஞர்கள் தகுந்த முறையில் தங்களுக்கு அளித்த வரவேற்புக்கு பதிலளித்தார்கள். பின்னர் அவர்கள் ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்த்தார்கள். புடோகின் தமது விஜயத்தின் அறிகுறியாக ஸ்டுடியோவில் ஒரு செடியை நட்டுவைத்தார் அவர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற அஜந்தா, எல்லோரா குகைகளைப் பார்த்து இந்தியர்களின் கலைத்திறனை வெகுவாக வியந்தார்கள்.

சென்ற மாதம் 29ம் தேதி பெங்களூருக்கு விஜயம்செய்த அவர்களுக்கு பெங்களூரில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஷ்யக் கலைஞர்கள் இருவரும் சென்ற மாதம் 31ம் தேதி சென்னைக்கு வந்தார்கள். அன்றும் மறுநாளும் அவர்கள் சென்னையில், பம்பாய் டயமண்ட் பிக்சர்ஸ், பங்களூர் ஜெனரல் பிலிம் டிஸ்ட்ரிபியூட்டிங் கம்பெனி ஆகிய இரு கம்பெனிகளின் விருந்தினர்களாகத் தங்கியிருந்தார்கள். இக்கலைஞர்களைப் பத்திரிகைக்காரர்களுக்கு அறிமுகப்படுத்த சென்ற மாதம் 31ம் தேதி கனிமரா ஹோட்டலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கலைஞர்கள் ரஷ்ய பிலிம் தொழிலின் லட்சியங்களைப்பற்றிப் பேசினார்கள். பிறகு பத்திரிகை நிருபர்களின் (ரஷ்ய படத் தொழில் பற்றிய) பல கேள்விகளுக்கு அவர்கள் பதிலளித்தார்கள்.

பல கலை ஸ்தாபனங்களும், பல பிரமுகர்களும் சேர்ந்த 'ரஷ்ய கலைஞர்கள் வரவேற்புக் கமிட்டி'யின் ஆதரவில் அன்று மாலை, திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் கலாசாலை மைதானத்தில் ஒரு வரவேற்பு வைபவம் நடைபெற்றது. விழாவுக்குப் பிரதம நீதிபதி பி.வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். மந்திரிகள் கோபால் ரெட்டி, ரோச் விக்டோரியா,மற்றும் பல நக்ஷத்திரங்கள், படவுலகப் பிரமுகர்கள் எல்லோரும் விழாவில் கலந்து கொண்டனர். கூட்டத்தினருக்குக் இக்கலைஞர்கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர். அவர்களுக்குப் பல சங்கங்களின் சார்பில் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப் பட்டன. 'கலை பணக்காரர்களின் பொழுதுபோக்கு சாதனமல்ல. பல்லாயிரக்கணக்கான ரஸிகர்களும் அதை ரஸித்துப் பலனடையவேண்டும் என்பதே ரஷ்யர்ளின் கருத்து. இந்த நோக்கத்துடனேயே ரஷ்யாவில் சினிமாக் கலை இருக்கிறது" என்று தலைவர் குறிப்பிட்டார். மற்றும் பலர் ரஷ்யப் படத்தொழிலையும், கலைஞர்களின் திறமையையும் குறித்துப் பேசினார்கள். தங்களுக்கு அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கையில் புடோகின் இந்தியர்களின் கலைத்திறன் தம்மை வெகுவாகக் கவர்ந்து விட்டதாகவும், இந்தியாவின் நடன கேந்திரமாக சென்னை விளங்குவதாகவும் தெரிவித்தார். நடிகர் செக்கா ஸோவ்,

தங்களுக்கு இந்திய நடனங்கள் அளவற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகவும், இந்தியப் பெண்களின் கண் அழகைத் தங்களால் மறக்கவே முடியாது என்றும் சொன்னார். வந்தனோபசாரம் கூறுகையில் டைரெக்டர் கே. சுப்ரமண்யம், இந்தியர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட படங்களைத் தயாரிக்கும்படி ரஷ்யக் கலைஞர்களைக் கேட்டுக்கொண்டார். கடைசியாக கலைஞர்களுக்கு இந்திய சங்கீத, நாட்டியக் கச்சேரி விருந்துகள் அளிக்கப்பட்டன.

இம் மாதம் முதல் தேதி மாலையில் சித்ரா டாக்கீஸில், இந்தக் கலைஞர்களுக்கு, சித்ரா டாக்கீஸாரும், ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தாரும் சேர்ந்து ஒரு வரவேற்பை அளித்தார்கள். சென்னை மேயர் ஸ்ரீ. ஆர். ராமநாதன் செட்டியார் தலைமை வகித்தார். இந்த வரவேற்புக்கு மந்திரி கனம் கோபால் ரெட்டியும், டைரெக்டர் ராம்னாத்தும் வந்திருந்தார்கள். டைரெக்டர் ராம்னாத் பேசுகையில், தாம் இன்று டைரெக்டராக இருக்கப் பெரிதும் உதவியவை புடோகினின் படத் தயாரிப்பு பற்றிய புஸ்தகங்களே என்றும், தாம் புடோகினின் மாணவன் என்றும் கூறித் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளை விளக்கி சித்திரங்கள் வரையப்பட்ட மரப் பலகைகள் ஞாபகார்த்தமாக கலைஞர்களுக்கு அளிக்கப் பட்டன. புடோகின் பதிலளிக்கையில், தாம் அடுத்த தடவை சென்னைக்கு விஜயம் செய்யும்போது தமிழில் பேச முயற்சிப்பதாகக் கூறினார். மேலும் பேசுகையில், 'இந்தியக் கலைகள் மிகவும் புராதனமானவை, சிறப்பானவை, எல்லோரா அஜந்தா குகைகள் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தவை, இந்திய நடனங்கள் பிரமாதமாக இருக்கின்றன' என்றெல்லாம் குறிப்பிட்டு இந்திய மக்கள் என்றென்றும் சுகமாக வாழ வேண்டுமென ஆசி கூறினார். மறுநாள் பண்டித நேருவின் விருந்தினர்களாக இருக்க, அன்று இரவே அவர்கள் சென்னையை விட்டுக் கிளம்பிப் போனார்கள்.

1951ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1951ற்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின்பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம். தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூர தேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினாலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்). தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Pt. Dev Dutt Shastri Raj Jyotishi (G.M.)

KARTARPUR, PB.

இம்மாதம் வெளிவரும் "கலாவதி"
தமிழ்ப் படத்தில் டி. எஸ். துரை
ராஜ் முக்கிய பாகத்தில் தோன்றி
நடிக்கிருர்.

"வனசுந்தரி"யில் ராஜகுமாரி வன சுந்தரியாகத் தோன்றி சின்னப்பா வின் மனதை மட்டுமன்றி ரஸிகர் களின் மனதையும் கவருகிருர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு பிரபல
பி. யு. சின்னப்பாவை ஸ்ரீ கிருஷ்ணா
பிக்சர்ஸின் "வனசுந்தரி" தமிழ்ப்
படத்தில் சந்திக்கலாம்.

இவர்களுக்கு நாம் இடையூறு விளை
விப்பானேன் ? அப்புறம் செல்வோம்!
("கலாவதி"யில் டி. எஸ். துரைராஜும்,
ஸி. டி. ராஜகாந்தமும்).

பொதுஜனம் பேசுகிறார்

* ரசிகர்களின் கடமை

பெண்மையின் பெருமையை அறியாத கயவர்கள்–செல்வத்தின் செழுமைக்குக் குறுக்கு வழியைப் பின்பற்றும் சுயநல வாதிகள்–வகுப்பு வெறியர்களுக்கு வால் பிடிக்கும் வஞ்சகத் துரோகிகள்–ஒரு சிலர் நமது பட முதலாளிகளிடையே இருக்கின்ற காரணத்தினால்தான் தமிழ்ப் படக் கலை முன்னேறவில்லை. ‘தணிக்கை குழு’ என்று ஒரு சிலரை ஆட்சியாளர் அமர்த்தியிருப்பினுங்கூட, சூழ்நிலை அவர்களைத் தங்களது கடமைகளினின்றும் வழுவத் தூண்டுகிறது. வெள்ளிப்பணம் கொள்ளை கொள்ளையாகச் செலவு செய்து படம் பிடிக்கும் முதலாளிகள் ‘தணிக்கையாளரின்’ கண்களை மறைக்க மந்திரங் கற்றிருக்கலாம்! கலையின் பெயரால் காணக் கண் கூசும் நடனக் காட்சிகளையும், மறுமலர்ச்சியின் பெயரால் துவேஷப் பிரசார வசனங்களையும், கண்டும் கேட்டும் மனம் நொந்து வரும் நமது ரசிகர்கள் மனது வைத்தால் இந்த அட்டூழியங்களுக்கு ஒரு முடிவு கட்டலாம். நமது ரசிகர்கள் முக்கியமான நகரங்களிலெல்லாம் ரசிகர் சங்கங்களை ஏற்படுத்தி—மக்களது மதிப்பைப் பெறும்படியாக தணிக்கை முறை நடைபெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். படப்பிடிப்பிற்கு முன்பே, படக் கதைகளையும் வசனங்களையும் தணிக்கை செய்து, வகுப்புத் துவேஷ வசனங்களை அடியோடு நீக்கச் செய்யவேண்டும். மக்களது மதிப்பைப் பெற்ற சினிமாப் பத்திரிகை யாசிரியர்களின் ஆலோசனைகளை மந்திரிகள் கேட்டு அதன்படி செயலாற்றுவார்களே யானல் ஓரளவாவது தமிழ்ப் படங்கள் ஆபாசமற்ற முறையிலே, இனத் துவேஷமற்ற விதத்திலே சிறப்புடன் வெளிவரலாம்.

எம். எம். பொன்னுசாமி,
கரூர்.

தென்னாட்டுப் படத் தொழிலின் ஆமைவேகம்!

சினிமாப் படத் தயாரிப்பில் வட இந்தியர்கள் வேகமாக முன்னேறி வருகின்றனர். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் கதை பொறுக்கும் விஷயம்தான் முக்கியமானது. நம் சினிமாத் தொழில் ஆரம்பித்த சமயம் எடுத்த ‘ஹரிச்சந்திரா’, ‘சாவித்திரி’, ‘மாய மோதிரம்’, ‘மாயா நகரம்’ போன்ற புராண—கிராமியப் படங்களையே இப்பொழுதும் எடுத்து வருகிறார்கள். வட இந்தியர்கள் காலத்திற்கேற்ற சமூகப் படங்களாக எடுத்து வருகிறார்கள். ஆனல் தென்னிந்தியப் பட முதலாளிகள் மட்டும் “ராஜகுமாரி”, “மந்திரி குமாரி”, “மாயக் குதிரை” என்று எடுத்துத் தள்ளுகிறார்கள். நம் தென்னிந்தியப் படங்களில் ஒரு ராஜகுமாரன்—அவனுக்கு ஒரு தோழன், ஒரு ராஜகுமாரி—அவளுக்கு ஒரு தோழி!—ராஜகுமாரனிடம் மாய மோதிரம்—பறக்கும் ஜமக்காளம் இவை உள்ளன. கடைசியில் சுபம். என்ன கதை இது? கதை என்றால் நம்பக் கூடியதாக இருக்க வேண்டாமா? அப்பொழுதுதானே நம் தென்னிந்தியப் படத் தொழிலின் ஆமை வேகம்—யானை வேகமாகவாவது ஆகும்!

மெலட்டூர் விஸ்வநாதன்,
பூனா.

---

*பரிசுக் கடிதம். எழுதியவர் : எம். எம். பொன்னுசாமி, 6/54, ஆலமரத் தெரு, கரூர்.

(MADRAS) LTD.

பிராஞ்சுகள் :

286, சைனா பஸார், சென்னை-1.

71, பாண்டிபஸார், தி. நகர், சென்னை-17.

இந்தியாவில் மிகப் பெரிய பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF FACTORY IN MADRAS



N.V. SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

N. V.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 - மதராஸ்.

பின்பற்றுக!

இப்பொழுது தியேட்டர்களில், படம் முடிந்தவுடன் இந்தியக் கொடியைக் காட்டுகின்றனர். நம் நாடு சுதந்திரம் பெறும் முன்பு கொட்டகைகளில் காட்சியின் கடைசியில், பிரிட்டிஷ் கொடி காண்பிக்கப்பட்டன. அப்பொழுது ஆங்கிலேயர்கள் எழுந்து நின்று அக் கொடிக்கு மரியாதை செலுத்திவிட்டு, (அது மறைந்த பிறகு தான்) வெளியே செல்வான். வெள்ளையர்களை எல்லாவற்றிற்கும் 'காப்பி'யடிக்கும் நம்மவர்கள் இந்த நல்ல முறையை ஏன் பின்பற்றக் கூடாது?

எம். நாகராஜன்,
சென்னை.

மொழியும் கலையும் அழிவதா?

இன்று வெளியிடப்படும் தமிழ்ப் படங்கள் பெரும்பாலானவற்றில் பிரதம பாகங்களில் நடிப்பவர்கள் யாவரும் ஆந்திரரே. இந்த நிலைமை வளர்ந்து கொண்டே போனால், ஆடைக்கு ஆமதாபாத், இரும்புக்கு டாடா, சிமெண்டுக்கு டால்மியா என்பதேபோன்று தமிழ்பட உலகிற்கு ஆந்திராவைக் குறிப்பட வேண்டிய மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும். இந் நிலைமை வராமல் தடுக்க தமிழ் நாட்டு நக்ஷத்திரங்களும், பட முதலாளிகளும், பத்திரிகைகளும், சர்க்காரும் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் நடிகர்கள் தங்கள் ஆற்றல்களை நன்கு வெளிப்படுத்தி, உயர்ந்த முறையில் நடிக்க முயலவேண்டும். படமுதலாளிகள் தங்கள் படங்களில் தமிழ் நாட்டு நடிக நடிகைகளுக்கே அதிக ஆதரவு காட்ட வேண்டும். புதுப்புது நடிகர்களுக்கு நிறைய சந்தர்ப்பம் அளிக்கவும் முன்வர வேண்டும். இவர்கள் இப்பணி புரிய முன் வருவார்களேயாயின் கட்டாயம் இன்றுள்ள நிலை மாறி நாம் தலை நிமிர்ந்து நிற்கலாம்.

அ. அங்கமுத்து,
உளுந்தூர்பேட்டை.

இது நியாயமா?

டிசம்பர் மாத ஊசியில் 'நுனிப்புல்'லில், 'ஒரு நக்ஷத்திரம் தன்னை ஆவலுடன் தரிசிக்க வந்திருந்த விசிறிகளைத் தன்னுடைய நாயை விட்டு, நாய்க்கும் கேவல

மாக துரத்தச் சொன்னார்' என்று எழுதியிருந்ததைப் படித்தவுடன் மனம் எவ்வளவு வேகப்படுகிறது தெரியுமா! விசிறிகளினால்தானே நக்ஷத்திரங்களுக்குப் பெயரும் புகழும் கிடைக்கிறது. அதை மறந்து அவமானப் படுத்துகிறார்களே, இது நியாயமா! இனிமேலாகிலும் அப்படிச் செய்யாமல் விசிறிகளிடத்தில் அன்பாகப் பழக வேண்டும் என்று அபிமான நக்ஷத்தரங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். விசிறிகள் வயதில் சின்னவர்களாய் இருந்தாலும் அன்பில் பெரியவர்களாக இருப்பார்கள்.

ஆர். ராஜேஸ்வரி,
திருவாரூர்.

கவனிப்பார்களா ?

இப்பொழுதெல்லாம் நம் தமிழ்ப் படங்களில் முதலில் காட்டப்படும், தயாரிப்பாளர், டைரெக்டர், நடிக நடிகைகள் முதலியவர்களுடைய பெயர்கள் ஆங்கிலத்தில் காட்டப்படுகின்றன. நமது தமிழ் நாட்டில் தமிழ்ப் படிக்கத் தெரிந்தவர்களே மிகக் குறைவு. அப்படி இருக்கையில் பெயர்களை யெல்லாம் ஆங்கிலத்திலே காட்டினால் எல்லா மக்களும் முக்கியமாக, கிராம மக்கள் படித்துத் தெரிந்து கொள்வது முடியாத காரியம். எனவே, இனிவரும் படங்களிலாவது பெயர்களை முழுதும் தமிழிலேயே காட்டும்படி செய்யவேண்டும். ஒரு படம் வெற்றியடைய அப்படத்தின் சிருஷ்டி கர்த்தாக்களான டைரெக்டர் கேமிராமென், கதை வசன கர்த்தா, பாட்டு இயற்றியவர் முதலியவர்களுடைய திறமையும் காரணமாகும். படத்தைப் பார்க்கும் மக்கள் இவர்களுடைய பெயர்களை மட்டுமே அறிந்து கொள்ளுகின்றனர்; உருவத் தோற்றங்களைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே படத்தின் சிருஷ்டிகர்த்தாக்களின் பெயர்களைப் படத்தில் காட்டும்போது அவர்களுடைய உருவப் படங்களையும் காட்டுவது நலம். இவற்றைப் படத் தயாரிப்பாளர்கள் கவனிப்பார்களா?

எஸ். சேதுராமன்,
வலையப்பட்டி.

இதுவா 'க்யூ' என்பது ?

சென்னை வெலிங்டன் டாக்கீஸில் நேற்றும் இன்றும் நடந்து வருவது ஒன்று சிறுபான்மையோரால் கவனிக்கப்பட்டும், பெரும்பான்மையோரால் கவனிக்கப்படாமலும் இருந்து வரும் விஷயம் இதுதான்: வெலிங்டனில் 15 அணா டிக்கட்டிற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே புக்கிங் ஆபீஸ்தான் இருக்கிறது ரூ. 1—4—0 க்கும் அப்படித்தான். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வது" நடைமுறையில் கடினம். ஆதலால் பெண்கள் ஆண்களோடு 'க்யூ'வில் நிற்பதில்லை. இதனால் ஜன்னலுக்கு முன்பாக ஆண்களும் பெண்களும் நிற்கின்றனர். இதன் முடிவு, மணிக் கணக்காகக் க்யூவில் நின்ற ஆண்களுக்கு டிக்கட் கிடைப்பதில்லை. ஆட்ட ஆரம்பத்திற்குச் சற்றுமுன் வந்த பெண்களுக்குக்கூட டிக்கட் கிடைத்துவிடுகிறது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையாக மாற்றி டிக்கட் கொடுப்பதன் விளைவு இது. க்யூ என்றால் ஒரு வரிசையா? இரு வரிசைகளா? இதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து பெண்களுக்குத் தனியே புக்கிங் ஆபீஸ் திறப்பது அவசியம்.

எஸ். நாகேஸ்வர ராவ்,
மயிலாப்பூர்—சென்னை.

"சேச்சி" மலையாளப் படத்தில் ஆழ்ந்த துக்கத்திலிருக்கிறார் வைக்கம் சாஜா.

புனாவில் "பார்த்திபன் கனவு" நாடகம்

கலைக் கழகத்தாரின் மகத்தான வெற்றி

கலைக்கும் கனவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. முதலில், இவை இரண்டும் 'க' என்ற எழுத்தில் ஆரம்பமாகின்றன வல்லவா? நம் நாட்டில் எல்லாக் கலைஞர்களும் கனவு கண்டிருக்கிறார்கள். அந்தக் கனவுகளோ பின்னால், உயர்ந்த கலைச் சிகரங்களாக மாறியுள்ளன. உதாரணமாக, ஆசிரியர் 'கல்கி' வெகு நாட்களாகக் கனவு கண்டு வந்தார். கனவில் தாம் கண்ட பாத்திரங்களை நேரில் காண்பிப்பதற்காக, அஜந்தாவுக்கும், எல்லோராவுக்கும், மாமல்லபுரத்திற்கும் விரைந்தார்! அந்தக் கனவுகளே "பார்த்திபன் கனவு", "சிவகாமியின் சபதம்" என்ற சரித்திர இலக்கியங்களாக உருப் பெற்றுள்ளன.

"கல்கி"யின் 'கனவு'—புனாவிலுள்ள கலைக் கழகத்தினர் வெகு நாட்களாக கண்டுவந்த இன்னொரு கனவுக்கு ஆதரவு அளித்து விட்டது. "ஆங்கிலம், சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளில் உள்ளதே போன்று தமிழிலும் இலக்கிய நாடகங்கள் வேண்டும்" என்பதுதான் அவர்கள் கனவு. அக்கனவை "பார்த்திபன் கனவு" பலிக்கச் செய்துவிட்டது.

புனா நகரில் உள்ள தமிழர்கள், தங்கள் குழந்தைகளின் கல்விக்காக ஸரஸ்வதி வித்யாலயம் என்ற ஒரு உயர்தரப் பள்ளிக்கூடத்தை நடத்தி வருகிறார்கள். அப்பள்ளிக்கு ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்று நிர்வாகிகள் வெகு நாட்களாகக் கனவு கண்டார்கள். கலைக் கழகத்தார் இதற்கென நிதி திரட்டித் தரப் புறப்பட்டதும் மேலே சொல்லப்பட்ட எல்லாக் கனவுகளும் ஒன்று கூடின! "பார்த்திபன் கனவை", கலைக் கழகத்தார் ஒரு நாடகமாக மாற்றி சில தினங்களுக்கு முன் புனாவில் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள்.

நாடகத்தன்று அதன் ஆசிரியர் "கல்கி" அவர்களே புனாவிற்கு வருவதாக இருந்தது. ஆனால், அவருடைய உடல்நிலை இதற்கு இடம் தரவில்லை. இதைப் பற்றிக் கலைக் கழகத்தாரும் புனா தமிழ் மக்களும் வருந்தினார்கள்.

இந் நாடகத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய பல புதிய அம்சங்கள் நிறைந்திருந்தன. வட மொழி நாடக இலக்கியங்களில் "நாந்தி" என்று கூறப்படும் கடவுள் வணக்கத்திற்கும், பின் வரும் நாடகத்திற்கும்—அதிலும் அடுத்து வரும் காட்சிக்கும் தொடர்பு இருக்கும். ஒரு நாடகத்திற் கென்று எழுதப்பட்ட நாந்தியைத் தவிர வேறெதையும் நாந்தியாகப் பொருத்த முடியாது. இந்தச் சிறப்பு இந் நாடகத்திலும் இருந்தது, கடவுள் வணக்கம் கம்பீரமாக நாட்டை ராகத்தில் அமைந்திருந்தது. இந்தப் பாட்டு முடிந்தவுடனே, முதற் காட்சியில் பார்த்திப சோழனின் தர்பார் தொடங்கி, பல்லவருக்குக் கப்பங்கட்ட மறுத்தது மிகவும் பொருத்தமாகவே இருந்தது.

ஆங்கில நாடகங்களில் சிறப்பாகக் காணப்படும் "Dramatic Irony"—அதாவது நாடக பாத்திரங்கள் பேசும்போது தம்மை அறியாமலே பின்னால் வரப்போகும் முடிவைக் கூறிவிடுவது — என்ற உயர்ந்த அம்சம் இந்த நாடகத்தில் நன்கு அமைந்துள்ளது. உதாரணமாக, அருள்மொழி பார்த்திப மகாராஜாவின் தீர்மானத்தைக் கேட்டு மனம் குழம்புகிறாள். அவள் பேசும் வார்த்தை—

"முரசு அந்தோ முழங்குகின்றது
அரசர் முடிவை அறிவிக்கின்றது."

'அந்தோ' என்ற சொல்லிலும் 'முடிவை' என்ற சொல்லிலும் பார்த்திப மகாராஜாவின் வீர மரணம் தொனிக்கிறதல்லவா! இம்மாதிரியான மற்றும் பல சிறப்பான அம்சங்கள் இந்நாடகத்தில் பொருந்தியுள்ளன.

இந்நாடகத்திற் கென்றே காட்சி ஜோடனைகள் தயார் செய்யப்பட்டிருந்ததை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மாமல்லபுரத்திலுள்ள பாறைக் கோயில்களும், யானையும் உள்ள காட்சியை, ரஸிகர்கள் கண்டதும் பிரமித்துப் போய்விட்டனர். சித்திர மண்டபத்திலுள்ள வர்ண ஓவியங்கள் பிரசித்தி

பெற்ற அஜந்தா சித்திரங்களை நினைவூட்டின. பொன்னனும் வள்ளியும் படகில் வந்து இறங்குவதும், மாரப்பன் படகை அவிழ்த்து விட்டவுடனே படகு நகர்வதும், அச்சமயத்தில் தண்ணீரின் சலசலப்பு கேட்பதும் தத்ரூபமாயிருந்தன.

இந்நாடகம் 5½-மணி நேரம் நடந்தது. எனினும், சபையோர் சலிப்படையாது அதை ரஸித்ததற்குக் காரணம், ஜீவன் ததும்பும் 'கல்கி'யின் தமிழ் வசனங்கள் தாம். பொன்னனும் வள்ளியும் சபையில் வந்தபோதெல்லாம்—அதுவும் மாரப்பனைக் கிண்டல் செய்தபோதெல்லாம் — சபையோருக்கு நாடகம் பார்க்கிறோம் என்ற எண்ணம் துளிக்கூட ஏற்படவில்லை.

ஒரு நூல் சிரஞ்சீவித்துவம் பெறுவதற்கு, அதில் வரும் 'த்வனி' (குறிப்பாக உணர்த்துதல்) என்ற அம்சம் முக்கியமாகும். வெளிப்படையாகக் கூறி விளக்குவதற்குப் பதில், சில சொற்கள் மூலம் குறிப்பாகத் தெரிவித்திருப்பதாலேயே, காளிதாஸன் போன்ற நாடகாசிரியர்கள் அழியாவரம் பெற்றுள்ளனர். அத்தகைய 'த்வனிப்' பொருள்கள் இந்நாடகத்தில் பொன்னன்—வள்ளி சம்பாஷணைகளில் கூட ஊடுருவி நிற்கின்றன. உதாரணமாக, விக்ரமன் விடுதி மண்டபத்தில் ஜுரமாகக் கிடந்தபோது பொன்னன் வைத்தியரை அழைத்துவரச் செல்கிறான். அச் சமயத்தில், குந்தவி அங்கு வந்து விக்ரமனைத் தன் அரண்மனைக்கு எடுத்துச் செல்கிறாள். பொன்னன் திரும்பிவந்து திகைத்து நிற்கும்போது அங்கு சிவனடியார் வருகிறார்.

கலைக்கழகத்தார் தயாரித்துள்ள மாமல்லபுரக் காட்சி

சிவ: பொன்னா ! நீ நினைப்பதுபோல் இளவரசர் கபாலிகர் கையில் சிக்கவில்லை. பத்திரமான இடத்தில்தான் இருக்கிறார்.

பொன்: என்ன ? நிசமாகவா !

சிவ: ஆமாம் ! இப்போது குந்தவி தேவியின் பராமரிப்பில் இருக்கிறார்.

பொன்: ஐயோ ! குடி கெட்டுப் போச்சுங்களே !......

சிவ: பயப்படாதே, பொன்னா ! நீ நினைப்பதுபோல் அபாயமே கிடையாது. முதலாவது, குந்தவி தேவிக்கு அவரை அடையாளம் தெரியாது.

பொன்: தெரிஞ்சு போச்சுன்னா...!

சிவ: தெரிந்தாலும் பாதகமில்லை..... ஏனென்றால்...குந்தவி தேவிக்கு...மஹாராஜாவின்மேல்......(நிறுத்துகிறார்)

பொன்: (முகமலர்ச்சியுடன்) ஆ !...... அப்படியா !......

சிவ: ஆமாம், பொன்னா ! கடவுள் சித்தம் அப்படி இருக்கிறது.

இங்கு ஆசிரியர் குந்தவி தேவிக்கும் விக்ரமனுக்கும் ஏற்பட்டுள்ள காதலைப் பற்றிக் குறிப்பாக— ஆனால் பக்குவமாக குறிப்பிட்டிருக்கிறாரல்லவா ?

தமிழர்கள் உயர்ந்த பண்பாடு உடையவர்கள். அவர்கள் உயர்தரமான ஹாஸ்யத்தையே விரும்புகிறார்கள்; உயர்ந்த இலக்கியங்களை நன்றாக ரஸிக்கிறார்கள் என்பவை நாடகத்தின் போது சொல்லாமலே விளங்கிற்று. மருந்துக்குக் கூட கீழ்த்தரமான ஹாஸ்யம் கலக்கப்படாத இந்நாடகத்தில், சபையோர் கரகோஷங்கள் செய்த வண்ணமாகவே இருந்தனர். இந்த நாடகத்தில், உயர்ந்த பாத்திரங்களின் தனிமை உரைகள் அகவல் வடிவத்தில் வசன காவியமாக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டு தமிழர்கள் ஓடவில்லை ! அதற்குப் பதிலாக, மிகவும் ரஸித்தார்கள்.

[தொடர்ச்சி 54ம் பக்கத்தில்]

அம்சா தேவி

(18ம் பக்கத் தொடர்ச்சி)

ராதா நல்ல அழகிதான். ஆனால், சிறிது கர்வம் பிடித்தவள்.......வீட்டிலே ராதாவின் வாக்குதான் தேவவாக்கு. ஸ்டுடியோவில் புவனசுந்தரம் பெண்களைத்திட்டும்போது, "என் ராதாவின் கால் தூசிக்குக் காணுமா உங்கள் யோக்யதை!" என்று கேட்பார். ஆனால் இப்பொழுது! அம்சா தேவியின் முன் பலி கேட்கும் பூசாரிபோல் நின்று கொண்டிருந்தார் புவனசுந்தரம்.

அம்சாவின் கணவன் ராஜுவுக்குஏதோ காலில் சிறு ஆபரேஷன். அதற்காக ஆஸ்பத்திரியிலேயே அவன் தங்க வேண்டியதாகிவிட்டது. இரவு வேளையில் அம்சா தேவி தனியாகத்தான் வீட்டில் இருந்தாள். இது தெரிந்துதான் புவனசுந்தரம் அவளிடம் தம் துர் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வந்திருந்தார்.

"ஸ்ரீமதி...அம்சாதேவி! கடைசியாகச் சொல்லுகிறேன். இன்று இரவு பதினொரு மணிக்கு ஸ்டுடியோவில்-என் தனி அறைக்கு வந்துவிட வேண்டும். இல்லையேல், நடிகை அம்சா பட உலகில் இருக்கவே மாட்டாள். யோசித்து நல்ல முடிவுக்கு வா..." என்று புவனசுந்தரம் உறுமிவிட்டு வெளியே நடந்தார்.

அவர் சொல்லிச் சென்ற வார்த்தைகள் கணீர் கணீர் என்று அம்சாவின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன. உலகிலே ஆதரவு துளியும் இல்லாத தனித்த ஆத்மா தான் ஒருத்திதான் என்று அவளுக்குப்பட்டது புவனசுந்தரத்தின் இச்சைக்கு இணங்குவதைவிட கேவலச்செய்கை வேறொன்றுமில்லை. ஆனால் இணங்காவிட்டாலோ? தன் ஆருயிர்க் கணவன் ராஜுவிடம் அவர் அந்தபோட்டோவைக் காட்டி, சந்தேகப் புயலைக் கிளப்பி, தங்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்துவான் பாவி...என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தாள் அம்சா தேவி.

ராதாவிடம் போய் புவனசுந்தரத்தின் கெட்ட எண்ணத்தைச் சொல்லிவிடலாமா!...சே!...சே!...முழு முட்டாள் தனம். தன் கணவனிடம்போய் இவைகளைக் கூறலாமா!......ஐயோ! அவர் இப்பொழுது இருக்கும் நிலையில் இதையெல்லாம் சொல்லக்கூடாது. வெகு நேர யோசனைக்குப் பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல்..."ஆம்! அதுதான் சரி" என்று கூறிக்கொண்டே துள்ளிக் குதித்கெழுந்தாள் அம்சாதேவி.

அவள் மனதில் புயல் ஓய்ந்தது; குருட்டுத் தைரியம் புகுந்தது. மாற்ற முடியாத ஒரு பயங்கர முடிவுதான் அது. அதன்படி நடப்பதற்கான ஆயத்தங்களையும் செய்ய ஆரம்பித்தாள் அம்சாதேவி.

தன் மேஜையிலிருந்து ஒரு கூரிய சிறு கத்தியை வெளியே எடுத்தாள். அதன் கூரிய முனையிலே ஏதோ ஒரு திராவகத்தைத் தடவினாள். பிறகு நிறமற்ற ஒரு சிறு புட்டியை எடுத்தாள். அதன்மேல் 'விஷம்' என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அவள் கண்கள் இரண்டையும் மாறி மாறிப் பார்த்தன!

தான் படங்களில் நடிக்கும் காட்சி உண்மை வாழ்விலேயும் வரப் போவதை நினைத்தபோது அவள் உடல் புல்லரித்தது. தன்னுடைய முடிவான திட்டத்தை முடித்துவிடத் தன் மனதில் நன்றாய் ஆராய்ந்து பார்த்து, படிப்படியாக சம்பவங்களை வகுத்துக்கொண்டாள்.

முதலில் அவன் மிருக இச்சைக்கு இணங்குவதுபோல் நடிக்கவேண்டும். அவன் உள்ளத்தில் காமக் கனலை மூட்ட வேண்டும். அதற்கு அவள் சிரித்தாலே போதும்! பிறகு தான் கேட்பதை எல்லாம் அளிக்க சித்தம் என்று கூறுவான் அவன்! அன்று கடற்கரையில் முதல் முத்தமிட்ட இடத்திற்குப் போகவேண்டும். அந்தத் தனி இடத்தில் இரண்டே ஆத்மாக்கள்தான் அப்புறம்! துரோகி ஒழிவான்! அப்புறம்!

அம்சா தேவி சிரித்தாள். அவள் முகத்தில் பயம் பிரதிபலிக்கவில்லை. இருதயம் வேகமாக 'பட்பட்' என்று அடித்துக் கொள்ளவில்லை. சந்தோஷமாகவே இருந்தாள். அவள் கண்களில் ஒளி வீசியது. மேஜைமீதிருந்த தன் கணவனின் போட்டோவை எடுத்து தன் மார்போடு அணைத்து முத்தமிட்டாள்.

மாலை நேரம் நெருங்கியது. அம்சா தேவி தன் படுக்கை அறையில், தனக்குப் புகழைக் கொணர்ந்த பாட்டுக்களையெல்லாம் ஒருமுறை அழகாகப் பாடித் தீர்த்தாள். பிறகு தன்னை என்றுமேயில்லாத படி அழகாய் அலங்கரித்துக்கொண்டாள். மங்கிய நீலவர்ணப் புடவையை

உடுத்திக்கொண்டு, கூந்தலிலே கச்சிதமாக இரு மண மலர்களைச் சூட்டிக்கொண்டாள். பிறகு 'பிளாஸ்கி'ல் காப்பியை ஊற்றி எடுத்துக்கொண்டாள். அவள் புடவை மடிப்பில் அந்தக் கத்தி சொருகப்பட்டிருந்தது.

மணி ஆறு. அப்பொழுதே கிளம்பிவிட்டாள் அம்சா ஸ்டுடியோவை நோக்கி. வழக்கம்போல் காரில் செல்லவில்லை. சஞ்சாரமற்ற தெருக்கள் வழியே கால் நடையாகவே விரைந்து நடந்தாள்.

அவள் ஸ்டுடியோவை நெருங்கியபோது என்றுமில்லாத பரபரப்புடன் பலகார்கள் உள்ளே போய் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த அம்சா ஆச்சரியம் அடைந்தாள். காரணமோ தெரியவில்லை. காம்பவுண்டு சுவரிடம் வந்ததும் தன்னை யாரோ கூப்பிடுவது கேட்டுத் திரும்பினாள். எக்ஸ்ட்ரா நடிகை சந்திரா அவளை நோக்கி மூச்சு வாங்க ஓடிவந்து கொண்டிருந்தாள். புவனசுந்தரத்தின் காம இச்சைக்கு இரையானவர்களில் ஒருத்தி தான் அவளும்.

"அம்சா...அம்சா...உனக்கு விஷயம் தெரியாது...?" என்று கலவரம் கலந்த தோற்றத்தோடு கேட்டாள் சந்திரா.

"தெரியாதே!...என்ன......?" என்று கேட்டாள் அம்சா தேவி.

"நம்ம, புவனசுந்தரம் தற்கொலை செய்து கொண்டுவிட்டாரே!" என்றாள் நடுங்கும் குரலில் சந்திரா.

"ஆ!...நிஜமாகவா!" என்று ஆச்சரியத்தோடு கூவினாள் அம்சா. அவள் உள்ளத்தில் ஆனந்த மழை பொழிவதுபோல் இருந்தது.

"நிஜமாகத்தான்! அம்சா!...ரிவால்வராலே சுட்டுக்கொண்டு விட்டார்! அதோ, பார்! போலீஸ்கூட வந்திருக்கு! நாம் நழுவி விடுவோம், வா!...சீக்கிரம்!"

அம்சா, சந்திராவை கட்டிப்பிடித்துக் கொண்டாள். "சந்திரா! உன் செய்தி உண்மையாயிருந்தால் எனக்கு இதைவிட ஆனந்தம் வேறில்லை!... நீ விளையாடவில்லையே!" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

"இல்லை அம்சா—நிஜம்தான்! நெஞ்சில் ஒரு குண்டாம்!..."

"ஏன் தற்கொலை செய்துகொண்டார், தெரியுமா!"

ஜுபிடர் பிக்சர்ஸின் "மர்ம யோகி" படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனும், எம். என். நம்பியாரும் தோன்றும் ஒரு காட்சி.

"என்னவோ......ஐந்தரை மணிக்கு டெலிபோனில் யாரோ பேசினாங்களாம் அவருடைய காதலி ராதாவை வீட்டிலே மத்தியானத்திலிருந்து காணல்லேன்னு அப்புறம் ஒரு கவர் வந்ததாம். அதிலே, ராதா, தான் உதவி டைரக்டர் அமர்நாத்தோடு ஓடிப்போவதாகவும், அதற்காகக் கவலைப்பட வேண்டாமென்றும், போலீஸில் புகார் கொடுக்கவேண்டாமென்றும் எழுதியிருந்தாளாம்! அப்புறம் அவர் அரைமணி நேரம் தன் அறையிலேயே உட்கார்ந்திருந்தாராம்... கடைசியாக, "டமீல்!...டுமீல்!" என்று இரண்டு சத்தம் கேட்டது. எல்லாரும் ஓடிப் பார்த்தோம்...அங்கே...அப்பப்பா!......சொல்லவே முடியலே!...இரத்தத்திற்கு நடுவில் விழுந்திருந்தார்!..."என்னவோ எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது. நான் போறேம்மா" என்று சொல்லிவிட்டு சந்திரா போக முயன்றாள். அவளை இறுக அணைத்துக்கொண்டு கன்னத்தில் மிருதுவாக முத்தம் கொடுத்து, "போய்...வா...!" என்று கூறிவிட்டு, ஸ்டுடியோவுக்குள் அம்சா தேவி ஆனந்தமாய் லேசாகப் பாடிக் கொண்டே ஓடினாள்.

பூனாவில் "பார்த்திபன் கனவு"

[51-ம் பக்கத் தொடர்ச்சி]

நாடகத்தில் அவ்வப்போது, தகுந்த முறையில் ஒலிகள் கேட்கும்படி அமைக்கப்பட்டிருந்தன. நடுநிசிக் காட்சியில், சில் வண்டு, ஆந்தை போன்ற பக்ஷிகளின் சப்தங்கள், தண்ணீரின் சலசலப்பு, யுத்த முரசு முதலிய யாவும் மிக இயற்கையாய் இருந்தன.

நாடக பாத்திரங்களுக்குக் கூடியவரை, முன்பு 'கல்கி'யில் வாராவாரம் வெளியான 'பார்த்திபன் கனவு' என்ற பகுதிகளில் தீட்டப்பட்டிருந்த சித்திரங்களைப் போலவே வேஷம் போடப்பட்டிருந்தன. எல்லோரும் தம்தம் பாகங்களை நன்றாக உணர்ந்து நடித்தார்கள். இந்நாடகத்தின் மங்கள கீதமாக பாரதியாரின் "வந்தே மாதரம்" அமைந்திருந்தது.

கடவுள் வணக்கத்தையும், மங்கள கீதத்தையும் தவிர இந் நாடகத்தில் வேறு பாட்டுகளே கிடையாது. பாத்திரங்களின் மனோ பாவங்களை எடுத்துக் காட்டும் வகையில், வீணை, குழல் பிடில் ஆகிய பின்னணி வாத்தியங்கள் மட்டும் பொருத்தமான முறையில் வாசிக்கப் பட்டன. இதன் மூலம் கலைக் கழகத்தார், தமிழ் நாடக உலகில் ஒரு துணிகரமான மாறுதலைச் செய்திருக்கிறார்கள் என்று கூற வேண்டும்.

நாடக முடிவில், ஸரஸ்வதி வித்யாலயக் கட்டிடக் கமிட்டியின் சார்பில், சுகாதார இலாகா டிப்டி டைரெக்டர் டாக்டர் டி. கே. விச்வநாதன் நாடகத்தையும், நடித்தவர்களையும் சிலாகித்து கழகத்தினரையும் பாராட்டினார்.

இம்மாதிரியான நாடக இலக்கியங்கள் தமிழ்ப் பூங்காவில் நிறைய மலருமானால் கலைக் கழகத்தாரின் கனவு நனவாகி விடும். இதற்காக ஆசிரியர் "கல்கி" சிவனடியாராக உதவி செய்யக் காத்திருக்கும்போது கவலை ஏன்?

—"நித்யானந்தன்"

நடனம் ஆடினர்

"நந்தி"

நடனக்கலைச் சரித்திரத்தில் இப்போது புது சகாப்தம் தோன்றி ரஸிகர்களிடையே விறுவிறுப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அலாரிப்பு, ஜதிஸ்வரம், முதலிய வரிசைகளிலேயே கச்சேரிகள் தொடங்கினாலும், பிற்பகுதியில் நாட்டிய (நாடகப்) பாணியில் சில காட்சிகள் அமைக்கப்படுகின்றன. முழு நாட்டியமாகவே அநேக கச்சேரிகள் நடைபெறுவதிலிருந்து, உண்மையாகவே நடனக் கலை முன்னுக்கு வருகிறதென்று சொல்ல வேண்டும்.

கடந்த மாதம் முதல் தேதியன்று இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் ஆதரவில் கோகலே மண்டபத்தில் வைஜயந்திமாலா கோஷ்டியார் "ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்" என்ற கதையை நாட்டியமாக ஆடினார்கள். வைஜயந்திமாலா பாமாவாகவும், டி. ஆர். நவநீதம் கிருஷ்ணனாகவும், வஸந்தா நாரதராகவும் நடித்தனர். கிருஷ்ணனும் ருக்மிணியும் சேர்ந்து ஆடிய இரண்டாவது காட்சியில் ஜதிகள் கதைக்களி ஜதிகளைப் போன்று காணப்பட்டன. பாமாவின் இல்லத்திற்கு கிருஷ்ணன் விஜயம் செய்ததும், பாமா சந்தோஷத்தால் களி-நடனம் புரியும் ஒரு காட்சியில், பண்டைய கிரேக்க நாகரிகத்தில் காணப்படும் உடையில் காட்சியளித்ததும், பூர்வீக எகிப்திய சித்திரங்களில் காணப்படும் நடனத்தைப் போன்று ஆடியதும் பொருத்தமற்றுக் காணப்பட்டன. எகிப்திய நடனங்களையும், தென்னாப்பிரிக்க நீக்ரோ நடனங்களையும் கூட ஆடலாம். ஆனால் இவைகளை பரத நாட்டிய வித்வான் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவரால் நடத்தப்பட்ட பரத நாட்டியக் கச்சேரியில் ஆடியதுதான் விரும்பத்தகாத விஷயம்.

கிருஷ்ணனாக நடித்த நவநீதத்திற்கு வேஷப் பொருத்தம் சரியாக அமையவில்லை. ஆனால் அவர் தம் பாகம்வரை நன்றாகவே ஆடினார். நாரதராக நடித்த வஸந்தாவின் அமித நடிப்பு சகிப்புத் தன்மையை சோதிப்பதைப் போன்றிருந்தது. வைஜயந்திமாலா பாட்டுகளுக்கு அபிநயம் பிடிக்கும்போது ஏதோ சொல்ல சிரமப்படுவதுபோல் காணப்படுகின்றது. முகபாவங்கள் இயற்கையாக அமையவில்லை; பரத நாட்டியத்தைவிட ஓரியன்டல் நடனங்களில் வைஜயந்திமாலா நன்றாக சோபிக்கிறார். சாத்விகத்திற்கே பிரதானமளித்து, அபிநயம் பிடிக்கும் பதாபிநயங்களிலும், நிருத்யத்திலும், கவர்ச்சியாகக் காணப்படவில்லை. தமக்கு அமைந்துள்ள இயற்கையை யொட்டி, நடனத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று விரும்பினால், அவருக்கு பரதநாட்டியம் எதிர்பார்க்கும் அளவிற்கு உதவிபுரியாது.

செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் கடந்த மாதம் 7-ம் தேதியன்று "நடராஜ்-சகுந்தலா" கோஷ்டியாரின் நடனங்கள் நடைபெற்றன. அந்தக் கோஷ்டியில் ஒருவரான செல்லப்பன் ஆடிய "வேடன்" நடனம் நல்ல கதைக்களி ஜதிகளால் அமைக்கப்பட்டு நன்றாக ஆடப்பட்டது. "நிர்வாணம்" என்ற நாட்டியம் நல்ல கருத்துகளுடன் அமைந்திருந்தது. அதில் வேறுவிதமான கலை நுணுக்கங்கள் ஒன்றும் விசேஷமாக காணப்படவில்லை. "ஆண்டாள் திருக்கல்யாண"த்தில் சகுந்தலாவின் நடனம் கவர்ச்சிகரமாய் அமைந்திருந்தது. சிவ-சக்தி நடனம் ஆங்கிக சுத்தமாக விருந்தும் கவர்ச்சியாக காணப்படவில்லை. வீராவேசமான நடனங்களைவிட சாந்தம், கருணை முதலிய சாத்விகங்கள் நிறம்பிய நடனங்களில் நடராஜ் நன்றாக சோபிக்கிறார். காலப் போக்குக்கேற்றவாறு, உயரிய ஆஹார்யம், நல்ல கற்பனை முதலியவைகளுடன், கலையம்சம் குறையாது, ரஸனைக் கேற்றபடி அமைத்து ஆடப்பெறும் நடராஜ்-சகுந்தலா கோஷ்டியாரின் நடனங்களைக் கலைப்பணி என்றே கொள்ளலாம்.

தாம்பரம் சங்கீத சபாவில் கடந்த மாதம் 14ம் தேதியன்று (பொள்ளாச்சி) குமாரி கமலாவின் நடனங்கள் நடை

[58ம் பக்கம் பார்க்க]

இது நிஜமா!
15 வருஷங்களுக்கு முன் சடகோபனின் சிறு கதைகள் ஆனந்தவிகடனில் வெளி--யாகியுள்ளன
எஸ். ஆர். வி. எஸ்ஸில் இன்ஸ்பெக்டராக இருந்தார் "கடகம்" — விஜயகுமார்.
மூன்று பாஷை நடிகைகள் — நடிகர்
ராஜம்மா ஜெயம்மா பி.ஆர். பந்துலு
துப்பாக்கி வைத்திருக்கும் ஒரே நடிகர் துரைராஜ்
"ஸீதா பஹரணத்தில் ஸீதை-பாப்பா புல்லாங்குழல் வாசிக்கிறார்
யோகம்–சித்திரம் கைப்பழக்கம்!- ரஜனி.
நக்ஷத்திரங்களின் நாய்களுக்குள்ளேயே தலைவல் எடுக்கும்படி குரைக்கும் நாய்
பானுமதியுடையது. 'சிவனே'என்று சதா நிஷ்டையில் இருக்கும்-ஹொன்-னப்பாவின் நாய்
சுப்பய்யா பிள்ளை ஒரு கதர் நடிகர். ஓய்வு வேளையை நூற்றுக் கழிப்பார்
சினிமாவில் சோ தன் மனைவியை தன் தகப்பனார் அனுமதிக் காவிட்டால் தற்கொலை செய்து கொண்டு விடுவதாக மாலதியின் கணவர் வீராச்சாரி பயமுறுத்தி, வெற்றி பெற்றாராம்
குமாரி ருக்மணியின் தாயாருக்கும் ஆடத் தெரியும்; படங்களிலும் நடித்திருக்கிறார்
"பூகைலாஸ்" நடிகை ஹம்ச தமயந்தி ஆடுவார், மிருதங்கமும் வாசிப்பார்.
சட்டை நாத-பிள்ளையின் பூர்வாசிரமம்!
டைரக்டர் பி.என். ரெட்டி ஆடிட்டர் பரிக்ஷை தேறியவர். ஒரு சமயம் ஆந்திர நாடக சபாவில் நடிகராக இருந்தார்.
கணவர்களாலேயே சினிமாவில் சேர்க்கப்பட்டவர்கள். செல்லம்-சந்தானலக்ஷ்மி
பதி,

பெற்றன. அன்று நடைபெற்ற "கல்யாணி" ராக ஜதிஸ்வரத்தின் நடனம் தில்லானாவைப் போன்றிருந்தது. "வர்ணத்தில்" ஜதித் தொகுப்புகள் நன்றாக அமைந்திருந்தன. "காலைத் தூக்கி நின்று" என்ற பாட்டில், "வணங்கு தலை"க் குறிக்க, கைகூப்பி வணங்கிய இடங்களில் யோகாப்பியாசப் பயிற்சியில் பாதஹஸ்தானம் செய்வதைப்போல காணப்பட்டது. "மாலைப் பொழுதினிலே" என்ற பதத்திற்கு அபிநயம் மற்றவைகளை விட நன்றாக இருந்தது என்று சொல்லலாம். "தில்லானா"வில் கைகளின் அசைவுகளில் அநேகம் சுத்தமாகக் காணப்பட வில்லை. "நம்மவர் நம்மையே ஏமாற்றினால்" என்ற பாட்டின் ஆட்டத்தில் காணப்பட்ட ரஸனையில் ரஸிகர்கள் ''மறுமுறை" (ஒன்ஸ் மோர்) கூட கேட்டு ஆடச் செய்தார்கள்! குறத்தி நடனத்தில் உடையலங்காரம் பொருத்தமா யிருந்தது.

குமாரி கமலாவிடம் பாவங்கள் இயற்கையாக அமைந்திருக்கின்றன. ஆனால் அவைகளைப் பொருத்தமான இடங்களில் வெளிப்படுத்துவதில் பிழைகள் காணப்படுவதை சிறந்த நட்டுவனாரிடம் பயிற்சி பெற்றுப் போக்கிக் கொண்டால் நடனக் கலையில் சிறந்து விளங்கக்கூடும். அன்றைய நடனத்திற்கு கமலாவின் தாயார் பதங்கள் பாடினார். அநேக இடங்களில் உச்சரிப்புகளும், சொற் சேர்க்கையும் சரியாக இல்லை. "தாயே யசோதா'' என்ற பாட்டு "தாயே யசோதா உந்த நாயர் குலத்துதித்த" என்று பாடப்பட்டது!

ரஸிக ரஞ்சனி சபாவில் 21ம் தேதி யன்று நிர்மலா விஸ்வநாதனின் நடனக் கச்சேரி நடைபெற்றது. ஜதிகளைவிட சாத்விகாபிநயத்தில் அவர் சிறந்து காணப்பட்டார். "எத்தனை சொன்னாலும்", "தாயே யசோதா" என்ற பதங்களுக்கு அபிநயம் அழகாக இருந்தது. "அனைத்தும் சொல்லுவாள் — அவள் அநேகம் சொல்லுவாள்" என்ற பாட்டுக்கு அபிநயம் மிக நேர்த்தியாக அர்த்த புஷ்டியுடன் அமைந்திருந்தது. ஜதிகளை ஆடும் போது உடலவயங்களை விறைப்பாக வைத்துக்கொள்வதை குறைத்துக் கொள்ளவேண்டும். வேகமான ஜதிகளை ஆடும்போதெல்லாம் லாகவச் சுவை குறைந்திருந்ததால் பொம்மலாட்ட பொம்மை ஆடுவதைப் போன்றிருந்தது

10 வருஷ உத்தரவாதமுள்ள

வெஸ்டெண்ட் மாடல்கள்



நாகரிகமானவை, சிறியவை.

எவர்பிரைட் கேஸ்	ரூ.	19|-
பக்கா ரோல்ட்கோல்டு	ரூ.	23|-
சென்ட்ர் ஸெகண்டு - ரேடியம் டயல்	ரூ.	27|-
நாகரிக ரெக்டாங்குலர்	ரூ.	29|-

... லேடீஸ் ...
... வாட்சுகள் ...

5 ஜுவல்

நாகரிகமானவை	ரூ.	32|-
தங்க முலாம்	ரூ.	39|-

சொற்ப கெடியாரங்களே கைவசமுள்ளன. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

UNITED WATCH CO., (G. D. M.)
Post Box No. 6715 CALCUTTA—7.

இந்தியாவில் மிகப் பெரிய பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF FACTORY IN MADRAS



N.V.SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

என். வி.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 - மதராஸ்.

விரைவில் வருகிறது!

பிரபல நட்சத்திரம்
அஞ்சலி தேவி
வாழ்க்கை வர்ணனை

இருபதுக்கு மேற்பட்ட போட்டோக்களுடன் அழகி அஞ்சலி தேவியின் வாழ்க்கையில் நடந்த மிகமிகச் சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் நிறைந்த இப் புத்தகத்தைப் பார்த்தவுடன் நீங்கள் உடனே படித்துப் பத்திரப்படுத்திவிடுவீர்கள். அவ்வளவு அழகும் அற்புதமும் நிறைந்தது! நான்கு வர்ண அட்டை. இன்றே உங்கள் பிரதிக்கு உங்கள் ஏஜெண்டிடம் பதிவு செய்துகொண்டால்தான் கிடைக்கும்.

விலை 8 அணாதான்

தபாலில் பெற 9 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகள் உடனே தேவையான பிரதிகளுக்கு 25% கமிஷன் கழித்து முன் பணம் அனுப்பினால்தான் பிரதிகள் சப்ளை செய்ய இயலும். அல்லது வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

விபரங்களுக்கு:

வெண்ணிலா வெளியீடு
P. B. No. 1793
118, பிராட்வே சென்னை-1

சிறுகளத்தூர் சாமா

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் 1932ல் காஸ்மாபாலிடன் கிளப்பிலிருந்து விலகினர். ஒரு நாள் வேலை தேடும் நிமித்தம் வெளியே சென்று கடும் மழையில் அகப்பட்டுக்கொண்டு, மழை ஓய்ந்த பின் வீடு திரும்பிய சாமா, தம் வரவிற்காக ஒரு கிழவனர் காத்திருப்பதைக் கண்டார். அந்தக் கிழவனர் ஜி. பி- ஸி. ஸ்டுடியோவில் மேக்கப் மென்னுக இருந்த மாமா ராஜு என்று சாமாவுக்குத் தெரியும். என்ன, எங்கே, எதற்கு என்று ஒன்றுமே கூருமல், உடனே தம்முடன் வரும்படி அவர் அழைத்தார்; சாமா அவருடன் சென்ருர்.

புதிதாக ஸ்தாபிக்கப் பட்டிருந்த நேஷனல் மூவிடோன் ஸ்டுடியோவுக்குள் இருவரும் நுழைந்தனர். அந்த ஸ்டுடியோக்காரர்கள் தங்கள் முதல் படமான "வள்ளி கல்யாண"த்திற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். நாரதர் வேஷத்தில் நடிப்பதற்கு நன்ருக பாடக் கூடிய ஒரு நடிகருக்காக ஸ்டுடியோக் காரர்கள் வலை வீசியிருந்தனர்.

கும்பகோணத்தில் "ஹோமியோ ஹவுஸ்" திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படம். வலமிருந்து—ஸ்ரீமான்கள் எம். கே. டி. பாகவதர், எஸ். ஆரோக்யசாமி பிள்ளை, கே. ராமலிங்கம் பிள்ளை, டாக்டர் வி. ஆர். மூர்த்தி ஆகியவர்களைக் காணலாம்.

சாமாவை இந்த வலையில் சிக்கும்படிச் செய்து விட்டார் மாமா ராஜு. ஸ்டுடியோ முதலாளி டைரேக்டர் முதலானேர் சாமாவின் பாட்டைக் கேட்டதும் மிகத் திருப்தியடைந்தனர். அவரை நூற்றைம்பது ரூபாய்க்கு (!) தங்கள் படத்தில் நாரதராய் நடிக்க அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

"வள்ளி கல்யாணம்" படம் பம்பாய் இம்பீரியல் பிலிம் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது. இப்படம் படுதோல்வியாக முடிந்தது. சாமாவுக்கோ தாம் நடித்த முதல் படமே இப்படி முடிந்துவிட்டது மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணியது.

மனம் உடைந்து போயிருந்த சாமா ஸௌண்ட் ஸிடி ஸ்டுடியோவின் முதலாளி—டைரெக்டராயிருந்த காலஞ்சென்ற ஏ. நாராயணனைச் சந்தித்து, அவர் கீழ் வேலைக்கமர்ந்தார். பிலிம் எடிட்டிங், உதவி டைரெக்ஷன் இவைகளில் அவர் ஒரு வருஷகாலம் பயிற்சி பெற்றுவந்தார்.

ஒரு வருஷகாலம் இப்படிக் கழிந்தது. இதற்கிடையில் டைரெக்டர் ஆர். பத்மநாபனுக்கும் சாமாவுக்கும் பரிச்சியம் ஏற்படவே, அவர் இவருக்கு தம் "மாயா பஸார்" படத்தில் கிருஷ்ணன் வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். சாமாவுக்கு வேஷம் நன்கு பொருந்தியிருந்தது; அதோடு சிரத்தையுடனும் நடித்திருந்தார். ஜனங்கள் மிகத் திருப்தியடைந்து, "கிருஷ்ணன் வேஷத்திற்கே பிறந்தவர் சாமா" என்று புகழ்ந்தனர்.

"மாயா பஸாரு"க்குப் பிறகு "கருட கர்வ பங்கம்", "பாமா பரிணயம்" "சிந்தாமணி" ஆகிய படங்களிலும் கிருஷ்ணன் வேஷத்திலேயே நடித்தார் சாமா. அவருடைய "சிந்தாமணி"ப் பாட்டுகள் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலித்தன. அவர் ஜனங்களின் அபிமான நக்ஷத்திரங்களில் ஒருவராகிவிட்டார்.

"சிந்தாமணி" க்குப் பிறகு சாமா "அம்பிகாபதி"யில் கம்பர் வேஷத்தை ஏற்று நடித்தார். சாமா ஒரு சிறந்த நடிகர் என்பதை உர்ஜிதப் படுத்திவைத்த படம் இதுதான். இப்படத்தில் அவருக்கு தாடி 'மேக்கப்' கன கச்சிதமாய் இருந்தமையால், கிருஷ்ணன் வேஷத்திலிருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது.

ஒரு இளைஞன் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்ட வினோதம்!

ஒரு உண்மையான வாக்குமூலம்.

பிரிய வாசகர்களே!

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர் நடத்தை காரணமாக கெட்டலைந்தவன். நான் அத்துமீறி சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு, வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன். நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று. தொடர்ந்து மயக்கம் வர ஆரம்பித்தது. மரண வேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம் சொல்வேன். "குணப்படுத்தி விடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்று விடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரக வேதனைப் படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. ஒரு மஹாத்மாவை (பக்கிர்) சந்தித்தேன். என்னைக் கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி, நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்த மாதிரி இருக்கிறேன் என்பதுதான். அவரிடம் எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் சொல்லிவிட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம் பிறந்தது. உள்ளுக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும், மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இன்று என் மீறிய வீரிய சக்தியைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சில வேளை மருந்து சாப்பிட்டவுடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை. எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுதிட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்கு வந்தன. நான் ஊர் திரும்பியதும், மீதமிருந்த மருந்தை கைவிடப்பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன். முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொதுஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம் செய்கிறேன்.

காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு	ரூ.	2—8—0
பூசுவதற்கு எண்ணை	ரூ.	2—8—0

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணை பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது. கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ, அல்லது என் சுய நலனுக்காகவோ, நான் விளம்பரம் செய்யவில்லை. பொதுஜனங்களின் நலன் ஒன்றுதான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும். இந்த மருந்தால் குணமில்லை என்று சத்தியம் செய்தால் போதும். முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன்.

Prof. B. S. Sidhu, (G. M.) Halka No. 6, Jullundur City. Pb.

ஆனால், தாடி வேஷங்கள் அவரைக் கெட்டியாய் பற்றிக் கொண்டன.

"அம்பிகாபதி"க்குப் பிறகு சாமா "ஹரிஜனப் பெண்", "திருநீலகண்டர்", "கிருஷ்ணன் தூது", "சகுந்தலை", "திருவள்ளுவர்", "பரசுராமர்" ஆகிய படங்களில் மளமளவென்று நடித்து முடித்தார். இப்படங்களிலும் அவருக்குப் பெரும்பாலும் தாடி வேஷங்களே.

இப்படங்களில் நடித்தபின் சாமா "பாரத் பிக்சர்ஸ்" என்ற சொந்தப் படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்தார். முதல் படமாக, "ஷைலக்"கைத் தயார் செய்தார். அப் படத்தில் சாமா தம் திறமை பூராவையும் காட்டி 'நடித்திருக்கிறார்' என்று சொல்லுவதைவிட அசல் 'ஷைலக்'காகவே மாறியிருக்கிறார் என்று சொல்லுவதே பொருத்தமாகும். இருந்த போதிலும் 'ஷைலக்' படம் தோல்வி யுற்று நஷ்டத்தை உண்டுபண்ணியது.

"ஷைலக்"கின் தோல்வியால் சாமா மனம் குன்றிவிடவில்லை. "சுபத்ரா", "ராஜசூயம்" ஆகிய இரண்டு படங்களைத் தொடர்ந்து தயாரித்தார். இப்படங்களுக்கும் தோல்வியே ஏற்பட்டதால் சாமா கம்பெனியை மூடிவிட்டார். அவருக்கேற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் காரணமாக அவர் மனம் சோர்ந்து கொஞ்ச காலம் சினிமா உலகை அடியோடு மறந்திருந்தார் பிறகு அவர் மீண்டும் படங்களில் நடிக்க முற்பட்டார். ஜெமினியின் "நந்தனார்" படம் அவருக்கு இடம்அளித்தது. அதில் சாமா வேதியர் வேஷத்தைத் திறம்பட நடித்து, ரஸிகர்களின் அபிமானத்தை மறுபடியும் சம்பாதித்துக் கொண்டார். மீண்டும் அவர் பல படங்களில் தொடர்ந்து நடிக்கலானார். "மனோன்மணி", "சதி அருந்ததி", "சிவ கவி", "ராஜா பர்த்ருஹரி", "பர்மாராணி", "ராஜ ராஜேஸ்வரி", "மீரா", "ஆரவல்லி", "பக்த ஹநுமான்", "சுபத்ரா", "ஜீவ ஜோதி", "ராஜமுக்தி" ஆகிய படங்களில் அவர் நடித்திருக்கிறார்.

கிருஷ்ணன் வேஷம் சாமாவை விட்டு விட்டது. ஆனால், இந்த தாடி வேஷம் அவரைக் கடைசி வரையில் விடாது போலிருக்கிறது! சமீபத்தில் ஜுபிடர் பிக்சர்ஸார் வெளியிட்டிருக்கும் "மர்ம யோகி"யில் சாமா நடித்திருக்கிறார்— தாடி வேஷத்தில்தான்!

சாமாவுக்கு தற்போது 47 வயதாகிறது. அவர் 1904ம் வருஷம் ஜூன் மாதம் 26ந் தேதியன்று பிறந்தவர். அவருக்கு சிறிய தாயார் மூலம் பிறந்த ஒரே ஒரு சகோதரர் மட்டுமே இருக்கிறார். படிப்பை நிறுத்திய சிறிது காலத்திற்கெல்லாம் சாமாவுக்கு விவாஹம் ஆகி விட்டது. அவருக்கு மூன்று புத்திரிகள் மட்டும் பிறந்துள்ளனர். அந்த நாளில் நாடக மேடையில் பிரபல ராஜ பார்ட் நடிகராய் விளங்கிவந்த பெரிய மஹாதேவய்யர் சாமாவின் சித்தப்பாதான்.

சாமா ஒரு சிறந்த நடிகர்; ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்தை தத்ரூபமாய் நடிக்கும் ஆற்றல் உடையவர். எனவே அவருக்கு, சுவாமி சுத்தானந்த பாரதியார் "நடிகமணி" என்ற பட்டத்தையும், தேசியக் கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை "திரை அரசன்" என்ற பட்டத்தையும் அளித்திருப்பதை ரஸிகர்கள் முழுமனதுடன் ஆதரிக்கின்றனர்.

நம் படத் தயாரிப்பாளர்கள் 'ஷைலக்' போன்ற தனிச்சிறப்புடைய பாத்திரங்களை சாமாவுக்கெனவே பிரத்தியேகமாய் சிருஷ்டி செய்து அவரை நடிக்கச் செய்தால் அவரது நடிப்புத் திறமை மேலும் சிறப்புற ஹேதுவாயிருக்கும்.

எதிர்பாருங்கள்!

28—2—51ல் வருகிறது

படவுலகில் புகழ் பெற்ற நடிகை ரத்தினம்

மாதுரி தேவி

வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் "நிழல்" எழுதியது

விலை 8 அணா

25 அழகிய படங்களுடன் மேல் அட்டைப் படம் மூவர்ணத்தில் வெகுஅழகாக அச்சிடப்பட்டுள்ளது. பிரதிகளுக்கு முந்துங்கள்.

தனிப்பிரதி வேண்டுவோர் 0-12-0 அணா ஸ்டாம்பு அனுப்பி பெறலாம். ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் தரப்படும்.

கொக்கரகோ பதிப்பகம்

36, படவட்டம்மன் கோவில் தெரு,
P. B. போஸ்ட், சென்னை—12.

நீங்கள் ஒரு சினிமா நடிகர் ஆகலாம்

நீங்கள் ஒரு சினிமா நடிகர் அல்லது நடிகை ஆகி, மாதத்திற்கு ரூ. 100 முதல் 500 வரை சம்பாதிக்க விரும்புகிறீர்களா? எனின், எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்கு அதிகப் படிப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நேரில் வரும்படி கடிதமெழுதினலொழிய நேரில் வரவேண்டாம்.

டைரெக்டர்:

NATIONAL FILM CORPORATION
(G. M.)
147, Model Town,
Jullundur.

கோடிக்கணக்கான மக்கள் தேடி வாங்குவது

GRAMS: "EMMES"

M.S.
பட்டணம் பொடியே
MOHAN CO.

P.B. NO. 1161........ MADRAS-21.

இனும்

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும்; மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (G. M.)
JULLUNDUR CITY.

பிரம்மலோகம்

கலாவதி

விண்ட்ஸர் ப்ரொடக்ஷன்ஸின் கலாவதி இம் மாதம் 22-ம் தேதியன்று வெளிவருகிறது. எல்.எஸ். ராமச்சந்திரனுல் டைரெக்ட் செய்யப்பட்ட படம் இது. கலைமகளும், திருமகளும் தங்களுக்குள் யாருடைய சக்தி உயர்ந்தது என்பதைப் பரீட்சிக்க ஒரு முதல்தர அசடனைப் பிடிக்கிறுர்கள். அந்த அசடனைத்தான் டி. எஸ். துரை ராஜ் இப்படத்தில் நடிக்கிறுர். படம் முழுவதும் ஒரே ஹாஸ்யமாக இருக்குமாம். மற்றும் இப் படத்தில் டி.ஏ.ஜயலக்ஷ்மி, ஸி. டி. ராஜகாந்தம், எம். இ. மாதவன் முதலியோரும் நடித்திருக்கின்றனர்.

தேவகி

கணபதி பிக்சர்ஸின் தேவகி படத்தை உருவாக்குவதில் முனைந்திருக்கின்றனர். படப் பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். படம் மார்ச் மாத இறுதியில் திரையிடப் படலாமென்று தெரிகிறது. பல சமூகப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்ட இக்கதையில் வி. என். ஜானகிக்குப் பிரமாதமான பெயர் கிடைக்கப் போகிறதாம். ஆர். எஸ். மணி இப் படத்தை சிறந்த முறையில் டைரெக்ட் செய்து வருகிறுராம்.

ராணி

ஜுபிடரின் அடுத்த வெளியீடாக இருக்கும் அவர்களது ராணி. தமிழ்-ஹிந்தி இரு பாஷைகளிலும் இக்கதை படமாகி வருகிறது. தமிழ்ப் படத்தில் பானுமதியும்-பாலச்சந்திரனும் பிரதம பாகங்களில், ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில், நடித்து வருகிறுர்கள்.

பாதாள பைரவி

விஜயா ப்ரொடக்ஷன்ஸின் பாதாள பைரவி தமிழ், தெலுங்கு இரு படங்களின் படப் பிடிப்பு வேலையும் அநேகமாக முடிவடைந்துவிட்டதாம். மார்ச்சு மாத மத்தியில் இவை திரையிடப்படக் கூடுமாம். என். டி. ராமராவ், கே. மாலதி பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படங்கள் ஸ்ரீ. நாகிரெட்டியின் மேற்பார்வையில், கே. வி. ரெட்டியின் டைரெக்ஷனில் தயாராகின்றன. பயங்கர சம்பவங்கள் நிறைந்த ஒரு கிராமியக் கதை இது.

சௌதாமினி

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் சௌதாமினி தெலுங்குப் படத்தைத் தெலுங்கு வருஷப் பிறப்பன்றும், தமிழ்ப் படத்தை தமிழ் வருஷப் பிறப்பன்றும் வெளியிட்டுவிடுவது என்ற தீர்மானத்துடன் டைரெக்டர் கே. நாகபூஷணம் படப் பிடிப்பை ஜரூராக நடத்தி வருகிறுராம். கண்ணும்பா, எம். கே. ராதா, நாகேஸ்வர ராவ், டி. ஆர். ராமச்சந்திரன் பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது. சமீபத்தில்ரஜனி சம்பந்தப்பட்ட ஒரு பிரம்மாண்டமான தர்பார் காட்சி ஜெமினியில் படமாக்கப்பட்டது.

விதி

சக்தி ப்ரொடக்ஷன்ஸின் விதி படம் ஸ்டுடியோவுக்குள் நுழைந்து விட்டது. எம். கே. தியாகராஜ பாகவதருடன் பிரதம பாகத்தில் நடிக்கும் நடிகை யார் என்பது நிச்சயமாகவில்லை என்றாலும், மற்றவர்கள் சம்பந்தப் பட்ட காட்சிகள் படமாக ஆரம்பித்துவிட்டன. இந்தப் படத்தை கே. சுப்ரமண்யம் டைரெக்ட் செய்கிறுர்.

மணமகள்

என்னெஸ்கே பிலிம்ஸின் மணமகள் படமாகி வரும் வேகத்திலிருந்தே படம் தமிழ் வருஷப் பிறப்பு வெளியீடு என்பது நிச்சயமாகத் தெரிகிறது. கிருஷ்ணன் - பஞ்சு டைரெக்ஷனில் படம் பாதிக்கு மேல் தயாராகி முடிவடைந்துவிட்டதாம். லலிதா - பத்மினி - ராகினி சகோதரியர், கிருஷ்ணன் - மதுரம், டி. எஸ். பாலையா, இவர்கள் சம்பந்தப்பட்ட சில காட்சிகளை இம்மாத ஆரம்பத்தில் திருக்குற்றாலத்தில் தயாரித்துக் கொண்டு வந்துள்ளனர்.

வெளிவந்துவிட்டது

பிரபல சினிமா நட்சத்திரம்

பானுமதி

(வாழ்க்கை வர்ணனைப் புத்தகம்)

அழகான மூவர்ண அட்டை! ஏராளமான படங்கள் - பல சுவாரஸ்யமான சம்பவங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

தபாலில் பெற விரும்புவோர் 0-9-0 ஸ்டாம்பு அனுப்பவும்

25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பும் ஏஜண்டுகளுக்கே பிரதிகள் அனுப்பிவைக்கப்படும். உடனே முந்திக்கொள்ளுங்கள்.

டம் டம் பதிப்பக வெளியீடு.

அடுத்து வருபவை: லலிதா—பத்மினி—ராஜம்மா.

விற்பனை உரிமையாளர்கள்: நட்சத்திரப் பதிப்பகம், தேவகோட்டை.

தடைப்பட்ட மாதவிடாய்

தடைப்பட்ட அல்லது உபாதையுள்ள மாதவிடாயை உடனே குணப்படுத்தும். மென்லால் ஸ்ட்ராங் வாங்கி உபயோகியுங்கள். அல்லது எமக்கு எழுதவும். தவறாமல் [பலனளிக்கக் கூடியது.

விலை ரூ. 25/=

எக்ஸ்ட்ரா ஸ்ட்ராங் ரூ. 55/=

கர்ப்பத்தடை

இது சுகத்திற்காக மட்டுமல்ல; தேசத்தின் அவசியமும் கூட.

நிரந்தர தடை மருந்து ரூ. 25/=

ஐந்து வருஷ தடை மருந்து ரூ. 20/=

இது உங்கள் சுகத்தைக் காத்து, மாதவிடாயை ஒழுங்கு படுத்தும். இதை இங்கிலாந்தில் உபயோகித்து, பலனுள்ளது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

Lady Doctor - **KAVIRAJ SATYAVATHI,**

(Gold Medalist, England Trained, & of Lahore fame)

702, CHANDNI CHOWK
(Between Imperial Bank & Fountain)
DELHI.
Phone—6855.

27, BABER LANE,
(Between Bengali Market & Connaught Circus)
NEW DELHI.
Phone—8646.

குண்டூசி டைரி

அக்டோபர், 1950

17. "நாங்கள் அன்னியர்களாக இருந்தோம்" என்ற ஆங்கிலப்படத்திற்கு சென்னை சர்க்கார் தடை விதித்தார்கள்.

20. நகர சினிமாத் தியேட்டர்கள் சார்பில் ஒரு தூது கோஷ்டி உள்நாட்டிலாகா காரியதரிசியை பேட்டி கண்டது.

23. சேலத்தில், 'சேலம் சினிமாப் படம் திரையிடுவோர் கழகம்' என்ற ஸ்தாபனம் ஆரம்பமாயிற்று.

27. தமிழ்நாடு டாக்கீஸின் "அதிர்ஷ்ட தீபுடு" தெலுங்குப் படம் திரையிடப்பட்டது.

நவம்பர், 1950

8. ஏவி. எம். "ஜீவிதம்" தெலுங்குப் படம் சென்னையில் திரையிடப்பட்டது.

9. பக்ஷிராஜாவின் "ஏழைபடும் பாடு", லாவண்யாவின் "பாரிஜாதம்" ஆகிய தமிழ்ப் படங்கள் சென்னையிலும் வெளியூர்களிலும், திரையிடப்பட்டன.
பிரதிபாவின் "சொப்பன சுந்தரி" தெலுங்குப் படம் சென்னையிலும், ஆந்திராவிலும் திரையிடப்பட்டது.

24. பிரதிபாவின் தமிழாக்கப்பட்ட "ஸ்வப்பன சுந்தரி" தமிழ்நாட்டில் திரையிடப்பட்டது.

டிஸம்பர், 1950

2. கெம்ப்ராஜ் ப்ரொடக்ஷன்ஸின் "ராஜா விக்கிரமா" தமிழ்ப் படம் சென்னையில் இரு தியேட்டர்களிலும், தமிழ் நாட்டில் பல ஊர்களிலும் திரையிடப்பட்டது.

9. பக்ஷிராஜாவின் "பீதல பாட்லு" தெலுங்குப் படம் ஆந்திர தேசத்தில் தரையிடப்பட்டது.

14. "திருகுபாடு" என்ற தெலுங்குப் படம் தமிழாக்கப்பட்டு, "வீட்டுக்காரி" என்ற பெயருடன் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

20. சென்னையில் இரு தியேட்டர்களில் "வீட்டுக்காரி" திரையிடப்பட்டது.

22. ஜெமினியின் "மங்களா" ஹிந்திப் படம் வடநாட்டின் பல நகரங்களில் திரையிடப்பட்டது.

ஜனவரி, 1951

1. மந்திரி கனம் கோபால் ரெட்டி தலைமையில் நாடகக் கழக ஆண்டு விழா நடைபெற்றது.
சென்னைக்கு விஜயம் செய்திருந்த ஷேக்ஸ்பியர் நாடக கோஷ்டித் தலைவர் மிஸ்டர் நார்மன் மார்ஷலுக்கு ஸ்ரீ. ஏவி. மெய்யப்பன் ஒரு வரவேற்பளித்தார்.

7. மீண்டும் ஒன்று சேர்ந்த நடராஜ்–சகுந்தலா கோஷ்டியினரின் முதல் நடனக் கச்சேரி சென்னையில் நடைபெற்றது.

14. ஜெமினியின் "மங்களா" தெலுங்குப் படம் ஆந்திர தேசத்திலும், சென்னை நகரிலும் திரையிடப்பட்டது.

20. ஸ்ரீ. பாபநாசம் சிவனின் சஷ்டியப்த பூர்த்தி விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது.

21. மத்திய தணிக்கை போர்டு அங்கத்தினரான ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸனுக்கும் சென்னைப் பிராந்திய ஆபீஸர் ஸ்ரீ. கே. ஸ்ரீனிவாஸனுக்கும் சினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தார் ஒரு வரவேற்பளித்தார்கள்.

24. மத்திய சினிமாத் தணிக்கை போர்டை கனம். ஆர். ஆர். திவாகர் ஆரம்பித்து வைத்தார்.

31. சென்னைக்கு விஜயம் செய்திருந்த ரஷ்ய டைரெக்டர் புடோகினுக்கும், நடிகர் செர்க்கோஸோவுக்கும் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

134139

Printed by P. ARUNACHALAM at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316.